# உண்மைக் காதலின் உன்னதக் காவியம்

**உன்னதப்பாட்டின் உண்மைகள்** **எம்.எஸ்.வசந்தகுமார்**

பரிசுத்த வேதாகமத்திலுள்ள 66 புத்தகங்களிலும் அதிக சர்ச்சைக்குரியதும், கிறிஸ்தவர்களால் பலதரப்பட்ட வித்தியாசமான முறைகளிள் வியாக்கியானம் செய்யப் பட்டு வருவதுமான புத்தகம் “சாலொமோனின் உன்னதப்பாட்டு” என்றால் அது மிகையாகாது. கிறிஸ்தவ உலகில் அதிகளவு வியாக்கியான நூல்கள் இப்புத்தகத் திற்கு எழுதப்பட்டுள்ள போதிலும்,[1] இதன் அடிப்படைச் செய்தியை முழுமையாக அறியாதவர்களாகவே கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை. இதற்குக் காரணம், உன்னதப்பாட்டிற்கு எழுதப்படும் வியாக்கியான நூல்கள் ஒன்றுக் கொன்று முரண்பட்ட கருத்துக்களையும் விளக்கங்களையும் கொண்டிருப்பதேயாகும். இதனால், எழுதப்பட்டுள்ள வியாக்கியான நூல்கள் உன்னதப்பாட்டுப் புத்தகத்தின் விடயங்களை மக்களிற்குச் சரியான விதத்தில் அறியத்தருவதற்குப் பதிலாக, அவர்க ளுக்கு அதிக குழப்பத்தையே ஏற்படுத்தியுள்ளன. எனவே, உன்னதப்பாட்டுப் புத்தகத் தின் சரியான விளக்கத்தையும், இப்புத்தகத்தின் மூலம் தேவன் நமக்குக் கற்பிக்கும் சத்தியங்களையும் அறிந்து கொள்வதற்கு, இதுவரைகாலமும் இப்புத்தகத்திற்கு கொடுக்கப்பட்டு வந்துள்ள வியாக்கியான முறைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியமாய் உள்ளது.

## 1. உன்னதப்பாட்டின் கருத்து

உன்னதப்பாட்டிற்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களில் கிறிஸ்தவ உலகில் அதிகம் பிரபலமடைந்து வந்துள்ள வியாக்கியான முறை “மறைபொருள் அர்த்த விளக்கம்” என்று அழைக்கப்படுகின்றது. அதாவது, உன்னதப்பாட்டில் எழுதப்பட்டுள்ள விடயங்கள் நேரடியாகச் சொல்லப்படாத மறைவான, ஆழமான ஆவிக்குரிய அர்த்தங்களைக் கொண்டுள்ளது என்பதே இவ்வியாக்கியான முறையின் தாற்பரியமாகும்.[2] கி.பி.16ம்

[1] கிறிஸ்தவ சரித்திரத்தின் முதல் 17 நூற்றாண்டுகளிலும் 500ற்கும் அதிகமான வியாக்கியான நூல்கள் இப்புத்தகத்திற்கு எழுதப்பட்டுள்ளதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது (R.B.Dempsey, *The Spiritual Marriage: The Exegetic History and Literary Impact of the Song of Songs in the Middle Ages*, p. 10). கி.பி.17ம் நூற்றாண்டிற்குப் பின்பும் உன்னதப்பாட்டிற்குப் பல வியாக்கியான நூல்கள் வெளிவந்துள்ளன.

[2] ஆங்கிலத்தில் இவ்வியாக்கியான முறை “அலகோரிக்கல் இன்ட(ர்)பிரிட்டேஷன்” (Allegorical Interpretation) என்று அழைக்கப்படுகின்றது. ஆங்கிலத்தில் “அலகெரி” (allegory) என்னும் பதம் “அல்லொஸ்” (*allos*) “அகொரெயோ” (*agoreyo*) என்னும் இருபதங்களின் சேர்க்கையினால் உருவாகியுள் ளது. இவற்றில் “அல்லொஸ்” என்னும் பதம் “மற்றையது” என்றும் “அகொரெயோ” என்னும் பதம் “பேசுதல்” அல்லது “அறிவித்தல்” என்னும் அர்த்தங்களைக் கொண்டுள்ளது. எனவே இவ்விருபதங்க ளும் ஒன்றாகச் சேர்க்கப்படும் போது, “மற்றதைப் பேசுதல்” அல்லது “மற்றதை அறிவித்தல்” என்னும் அர்த்தத்தைத் தருகின்றது. எனவே “அலகெரி” (allegory) என்னும் பதம் “ஒன்றைச் சொல்லுதல் ஆனால் அதில் வேறொன்றை அறிவித்தல்” என்பதாகும். இலக்கியங்களில் இத்தகைய சொற்பிரயோகம் விரிவுபடுத்தப்பட்ட உருவகமாக உள்ளது. அதாவது உபயோகிக்கப்பட்டுள்ள உருவகங்களை விரிவு படுத்தி உருவகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும், விவரணத்திற்கும் அர்த்தம் கற்பித்தலாகும். எனவே, இலக்கியங்களை “அலகெரி” முறையில் வியாக்கியானம் செய்தல் என்பது, எழுதப்பட்டுள்ளவற்றின் நேரடியான வார்த்தைகளுக்கு, மொழியில் உள்ள இயற்கையான சொல்லர்த்தத்தின்படி அவற்றை விளக் காமல், அவற்றிற்கு வேறு அர்த்தங்களைக் கொடுத்தலாகும். அதாவது வேதப் பகுதிகளை அவற்றின்


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

நூற்றாண்டில் சபைசீர்திருத்தம் ஏற்படும் வரை கிறிஸ்தவர்கள் உன்னதப்பாட்டை இவ்விதமாகவே வியாக்கியானம் செய்து வந்துள்ளனர். இதன்படி இயேசுகிறிஸ்துவிற்கும் சபைக்கும் இடையிலான உறவை மறைபொருளாகக் கொண்ட பாடலாக உன்னதப்பாட்டு எழுதப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்றது. யூதர்களோ, தேவனுக்கும் தங்களுக்கும் இடையிலான உறவை வர்ணிக்கும் பாடலாக உன்னதப்பாட்டு இருப்பதாகக் கூறுகின்றனர்.[3] எனினும், சில யூதர்கள், சாலொமோன் ஞானத்தை நேசிப்பதை உருவகிக்கும் பாடலாக உன்னதப்பாட்டை வியாக்கியானம் செய்துள்ளனர்.[4] இதன்படி, பாடலில் வரும் பெண், ஞானத்தை உருவகிக்கும் விவரணமாய் இருக்கின்றாள். பாரம்பரிய ரோமன் கத்தோலிக்க சபையினர், உன்னதப்பாட்டில் வரும் பெண்ணைக் கன்னி மரியாளாக வர்ணித்துள்ளனர்.[5] இவர்களைப் பொருத்தவரை உன்னதப்பாட்டு கன்னி மரியாளின் பரிசுத்த அழகைப் போற்றிப் பாடும் பாடலாகும்.[6] இதனால், உன்னதப்பாட்டு 4:7ல், "நீ பூரண ரூபவதி. உன்னில் பழுதொன்றுமில்லை" என்பதை மரியாளின் பாவமற்ற தன்மையைப் பற்றிய விவரணமாக இவர்கள் விளக்கியுள்ளனர்.[7] மரியாளின் மீதான தேவனுடைய அன்பைப் பற்றிய பாடலாக உன்னதப்பாட்டு இருக்கின்றது என்பதே இவர்களது கருத்தாகும்.[8] எனினும், இத்தகைய மறைபொருள் அர்த்தவிளக்கங்கள் உன்னதப்பாட்டில் சொல்லப்பட்டுள்ள விடயங்களை தாறுமாறாக்கும் தவறான வியக்கியானங்களாகவே உள்ளன. மேலும், இது மானிட

---

சரித்திர மற்றும் மொழியியல் விடயங்களைக் கருத்திற் கொள்ளாமல், அவற்றில் மறைவானதும் ஆழமானதுமான ஆவிக்குரிய அர்த்தம் இருப்பதாகக் கருதி மொழியில் அவற்றிற்கு இருக்கும் அர்த்தத்திற்கும் அப்பால் வேறு அர்த்தங்களைக் கற்பித்தலாகும் (A.B.Mickelsen, *Interpreting the Bible*, pp. 230-235; D.S.Dockery, *Biblical Interpretation: Then and Now*, pp. 27-41, 75-102).

[3] யூதமத நூல்களான 'மிஷ்னா, 'தல்மூட்' மற்றும் 'தாகும்ஸ்' போன்றவற்றில் உன்னதப்பாட்டிற்கு கொடுக்கப்பட்டுள்ள இத்தகைய வியாக்கியான முறையை நாம் அவதானிக்கலாம். தாகும்ஸ் என்னும் நூல், இஸ்ரவேல் மக்களது சரித்திரத்தின் ஐந்து காலப் பகுதிகளைப் பற்றிய பாடலாக உன்னதப் பாட்டைப் பின்வருமாறு வியாக்கியானம் செய்துள்ளது: 1). இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து புறப்படுதல், சீனாய் மலை, வாக்குத்தத்த பூமியைக் கைப்பற்றுதல் (1:2-3:6). 2). சாலொமோனுடைய ஆலயம் (3:7-5:11). 3). இஸ்ரவேல் மக்களது பாவமும் சிறைப்படுதலும் (5:2-6:1). 4). சிறையிருப்பிலிருந்து திரும்பி வருதலும் ஆலயத்தை மறுபடியும் கட்டுதலும் (6:2-7:11). 5). ரோம ராட்சியக் காலத்தில் சிதறடிக்கப்படுதலும் மேசியாவை எதிர்பார்த்திருத்தலும் (7:12-8:14) (R.Loewe, "Apologetic Motifs in the Targum on the Song of Songs" in *Biblical Motifs: Origins and Transformations*, pp. 159-196). இத்தகைய வியாக்கியான முறையை அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவர்கள் உன்னதப்பாட்டு 1:1-4:6ஐ தாவீதின் காலம் முதல் இயேசுகிறிஸ்துவின் மரணம் வரையிலான சபையினுடைய சரித்திரம் என்றும், 4:7-8:14ஐ, கி.பி.34 முதல் இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை வரையிலான சரித்திரம் என்றும் குறிப்பிட்டுள்ளனர். சிலர் முழுப் புத்தகத்தையும் சபையின் சீர்திருத்த காலத்தைப் பற்றிய சரித்திரம் என்று விளக்கியுள்ளனர். இவர்கள் "உன் மூக்கு தமஸ்குவின் திசையை நோக்கியிருக்கும் லீபனோனின் கோபுரத்தைப் போலவும் இருக்கிறது" (உன்.7:4) என்பதை சபை சீர்திருத்தவாதி மாட்டின் லூத்தரின் மூக்கைப் பற்றிய விவரணம் என்றும், சபை சீர்திருத்தத்தின் விடிவெள்ளியாகக் கருதப்படும் ஜோன் வைக்கிளி∴ப் உன்னதப்பாட்டு 6:4ல் கொடிகள் பறக்கும் படையைப் போல் இருப்பதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறுகின்றனர் (Cited in M.H.Pope, *Song of Songs*: *Anchor Bible Commentary*, pp. 128-129; H.H.Rowley, "Interpretation of the Song of Songs" in *The Servant of the Lord and Other Essays*, p. 200; R.W.Orr, *Song of Songs: New International Bible Commentary*, p. 702).

[4] இத்தகைய விளக்கம் கி.பி.16ம் நூற்றாண்டிலேயே உருவானது. இதில் பாடலில் வரும் பெண்ணுக்கு மட்டுமே மறைபொருள் அர்த்த விளக்கத்தின்படி விளக்கங்கள் கொடுக்கப்பட்:ள்ளது (Cf. M.H.Pope, *Song of Songs: Anchor Bible Commentary*, p. 110).

[5] Cf. R.E.Murphy, *Ecclesiastes and Song of Songs: Pamphlet Bible Series Volume 30*, pp. 24-25.

[6] தற்கால ரோமன் கத்தோலிக்க வேதஆராய்ச்சியாளர்கள் இத்தகைய விளக்கத்தை ஏற்றுக் கொள்ளாத போதிலும், நீண்டகாலமாக மரியாளைப் போற்றிப் புகழும் பாடலாகவே உன்னதப்பாட்டை ரோமன் கத்தோலிக்க சபை வியாக்கியானம் செய்து வந்துள்ளது (M.H.Pope, *Song of Songs The Anchor Bible Commentary*, pp. 188-192).

[7] Cited in G.L.Carr, *The Song of Solomon: Tyndale Old Testament Commentaries*, p. 26.

[8] Cited in R.B.Zuck, "A Theology of the Wisdom Books and the Song of Songs" in *A Biblical Theology of the* Old *Testament*, p. 254.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

நம்பிக்கைகளையும் உபதேசங்களையும் இப்பாலுக்குள் பலவந்தமாகப் புகுத்தும் விளக்க முறையாகவே உள்ளது.

அண்மைக் காலத்தில் சில வேத ஆராய்ச்சியாளர்கள், இப்பாடலை கானானிய தெய்வங்களான பாகாலுக்கும் அஸ்தரோத்திற்கும் இடையிலான அன்பைப் பற்றிய விவரணமாகவும் விளக்கியுள்ளனர்.[9] சிலர், அக்காலத்தைய புராணங்களில் காணப்படும் பாபிலோனிய 'தம்முஸ்' மற்றும் கானானிய 'பாகால்' என்னும் தெய்வங்களோடு தொடர்புடைய பாடலாக உன்னதப்பாட்டைக் கருதுகின்றனர். அக்காலத்தைய புறமத தெய்வ வழிபாடுகளோடு சம்பந்தப்பட்ட பாடல்கள் பாலியல் விடயங்களைக் கொண்டிருப்பதனால், உன்னதப்பாட்டும் இத்தகைய ஒரு பாடல் என்று இவர்கள் கூறுகின்றனர்.[10] எனினும், இவ்வேத ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டுகின்ற விதமான ஒற்றுமைகள் உன்னதப்பாட்டிற்கும் பாலியலோடு தொடர்புடைய அக்காலத்தைய புராண தெய்வங்களின் வழிபாட்டுச் சடங்காச்சாரங்களில் இல்லை.[11] இப்பாடலில் புறமதத் தெய்வங்களைப் பற்றியே உன்னதப்பாட்டில் சித்தரிக்கப்பட்டுள்ளது என்பதற்கு ஆதாரமாக சில வேத ஆராய்ச்சியாளாகள் ஆணின் சரீரம் உலோகங்களினால் செய்யப்பட்டதாக உன்னதப்பாட்டு 5:11-15ல் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும், பெண்ணின் கழுத்து கோபுரமாகச் (உன்.4:4) சித்தரிக்கப்பட்டிருப்பதாகவும் கூறுகின்றனர்.[12] உன்னதப்பாட்டில் பெண்ணின் மூக்கு கோபுரத்தைப் போல இருப்பதும், தெய்வத்தைப் பற்றிய விவரணத்திற்கான ஆதாரமாகக் கருதப்படுகின்றது.[13] ஆனால், உன்னதப் பாட்டில் உள்ள இத்தகைய உருவக விவரணங்களைச் சொல்லாத்தமாக விளக்கி அவை தெய்வச் சிலைகளைப் பற்றிய குறிப்பு என்று கூறுவது அர்த்தமற்றது. மேலும், வேதாகமத்திலுள்ள ஒரு புத்தகத்தைப் புறமத தெய்வங்களோடு தொடர்புடையதாக வியக்கியானம் செய்வது அர்த்தமற்றது. உன்னதப்பாட்டிற்கும், அக்காலத்தைய பறமதத் தெய்வங்களோடு சம்பந்தப்பட்ட பாடல்களிற்கும் இடையில் இருக்கும் வித்தியாசங்கள், உன்னதப்பாட்டை புறமதப்பாடல்களின் தழுவல் என்றும், புறமதத் தெய்வவழிபாட்டோடு சம்பந்தப்பந்தப்பட்ட பாடல் என்றும் எவ்விதத்திலும் விளக்க முடியாததற்கான ஆதாரமாக உள்ளது.[14]

---

9 A.Farstad, *Literary Genre of the Song of Songs*, pp. 48-60.

10 T.Meek, "The Song of Songs and the Fertility Cult" *The Song of Songs: A Symposium*, pp. 48-79.

11 N.Schmidt, "Is Canticles an Adonis Liturgy" in *Journal of the American Oriental Society*. 46 (1926), pp. 154-164.

12 M.H.Pope, *Song of Songs: Anchor Bible Commentary*, pp. 465, 548.

13 M.H.Pope, "Metastases in Canonical Shapes of the Super Song" in *Canon, Theology, and Old Testament Interpretation*, pp. 322-323.

14 அக்கால புறமத தெய்வங்களோடு சம்பந்தப்பட்ட பாடல்களைப் போலவே இயற்கையைப் பற்றிய வர்னணைகள் உன்னதப்பாட்டிலும் உள்ள போதிலும், இவை வெறும் வர்னணைகளாக மட்டுமே எழுதப்பட்டுள்ளன. அக்கால புறமதத் தெய்வப்பாடல்களில் உள்ளவிதமாக உன்னதப்பாட்டில் இயற்கை தெய்வமாகச் சித்தரிக்கப்படவில்லை. மேலும், திராட்சைரசத்தைப் பற்றி உன்னதப்பாட்டில் குறிப்பிடப் பட்டுள்ள போதிலும், அக்கால புறமதத் தெய்வப்பாடல்களைப் போல குடிபோதைக்கும் ஒழுக்கவீனங்க ளிற்கும் முக்கியத்துவம் கொடுத்து உன்னதப்பாட்டு எழுதப்படவில்லை. திருமணத்தின் தூய்மையையும், உண்மை அன்பையும் உன்னதப்பாட்டு வலியுறுத்தவது போல அக்கால புறமதத் தெய்வங்களோடு சம்பந்தப்பட்ட பாடல்கள் இல்லை. புறமதப் பாடல்களில் தெய்வங்களிற்கிடையிலான காதலும், பொறாமையும், ஒழுக்கவீனங்களும் இருப்பது போல உன்னதப்பாட்டு எழுதப்படாமல், ஒருவன் ஒருத்தியை மட்டும் நேசிக்கும் உண்மை அன்பே உன்னதப்பாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (A.Hwang & S.Goh, *Song of Songs: Asia Bible Commentary*, pp. 27-28.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

சில வேத ஆராய்ச்சியாளர்கள் உன்னதப்பாட்டை அக்காலத் திருமண வைபவத்தில் பாடப்படும் பாடலாகவே எழுதப்பட்டதாகக் கருதுகின்றனர். யூதர்களுடைய திருமண வைபவங்கள் ஒருவரா காலத்திற்கு நடைபெற்றமையால், அக்காலத்தில் மணமகனும் மணமகளும், அரசனையும் அரசியையும் போல தங்களை அலங்கரித்துக் கொண்டு, பலவிதமான நடனங்களில் ஈடுபடுவார்கள் என்றும், இத்தகைய நடனங்களில் மணமக்கள் ஒருவரையொருவர் புகழ்ந்து பாடல்கள் பாடுவதற்காக எழுதப்பட்ட பாடல்களே உன்னதப்பாட்டுப் புத்தகத்தில் உள்ளதாகக் கூறப்படுகின்றது.[15] எனினும், இவர்கள் தங்களது கருத்திற்கு ஆதரமாக பிற்காலத்தைய அரேபிய மக்களது திருமண வைபவங்களையே உதாரணமாகக் காண்பிக்கின்றமையால், இவர்களது விளக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது.[16] மேலும், உன்னதப்பாட்டுப் புத்தகத்தின் பாடல்கள் திருமண வைபவத்தைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்படவில்லை. பாடல்களின் மொழிநடை அவை பகிரங்கமாகப் பாடக் கூடியவைகளாக இல்லை என்பதை அறியத்தருகின்றது.[17] அத்தோடு, அக்காலத்தில் திருமணவைபவம் நடைபெறும் ஏழு நாட்களுக்கான பாடல்களாக உன்னதப்பாட்டை ஏழு பகுதிகளாகப் பிரிக்கவும் முடியாதுள்ளது.[18] உன்னதப்பாட்டில் திருமணத்தைப் பற்றி சில பகுதிகள் இருப்பது உண்மை என்றாலும் முழுப் புத்தகத்தையும் திருமண வைபவத்திற்கான பாடலாகக் கருதமுடியாது.

சில வேத ஆராய்ச்சியாளர்கள் உன்னதப்பாட்டை மரண சடங்காச்சாரங்களின் போது பாடுவதற்கான பாடல்கள் என்றும் கூறுகின்றனர். அக்காலத்தைய மரண சடங்காச்சாரங்கள், மதுபானம், பெண்கள், பாடல்கள் என்பவற்றுடன் கொண்டாடப்படும் வைபவங்களாக இருந்தன என்று கூறும் இவர்கள், இத்தகைய மரண சடங்காச்சார வைபவத்திற்காகவே உன்னதப்பாட்டில் உள்ள பாடல்கள் எழுதப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர்.[19] இத்தகைய வியாக்கியானத்திற்கு ஆதாரமாக உன்னதப்பாட்டு 8:6ல் குறிப்பிடப்பட்டுள்ள "நேசம் மரணத்தைப் போல் வலிது, நேச வைராக்கியம் பாதாளத்தைப் போல் கொடிதாயிருக்கிறது." என்னும் வாக்கியம் உபயோகிக்கப் படுகிறது. அன்பினால் மட்டுமே மரணத்தை மேற்கொள்ளமுடியும் என்று கூறும் வேத ஆராய்ச்சியாளர்கள், மரண சடங்காச்சாரங்களில் பாடுவதற்கான பாடலாக உன்னதப்பாட்டு இருப்பதற்கான ஆதாரமாக இவ்வசனம் உள்ளதாகக் கூறுகின்றனர்.[20] மேலும், உன்னதப்பாட்டு 5:1ல் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள் பிரேதத்தை அபிஷேகிப்பதற்கு உபயோகிக்கப்படுபவை என்பதனால் இதுவும் இவ்விளக்கத்திற்கான ஆதாரமாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.[21] ஆனால், மரணம் மனிதனைத் தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்தருப்பதைப் போலவே அன்பும் மனிதனைத் தன்னிடத்தில்

[15] Cited in F.Delitzsch, *Song of Songs*, pp. 162-176.
[16] R.Murphy & E.Huwiler, *Proverbs, Ecclesiastes, Song of Songs: New International Biblical Commentary*, 237.
[17] R.Gordis, *The Song of Songs and Lamentations*, p. 19.
[18] LaSor, Hubbard, Bush, *Old Testament*, p. 608.
[19] M.H.Pope, *Song of Songs: The Anchor Bible Commentary*, p. 228.
[20] *Ibid*. pp. 211-222.
[21] *Ibid*. p. 222.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

வைத்துக்கொள்ளும். அது மனிதனை மறுபடியுமாக வெளியே செல்ல அனுமதிக்காது என்பதே உன்னதப்பாட்டு 8:6ன் விளக்கமாகும். எனவே இவ்வசனத்தை ஆதாரமாகக் கொண்டு உன்னதப்பாட்டை மரண சடங்காச்சாரப் பாடல்கள் என்று கூறுவது அாத்தமற்ற ஒரு விளக்கமாகவே உள்ளது.

தெய்வத்திற்கும் தமக்கும் இடையிலான அன்பை அல்லது உறைவப் பற்றிய பாடலாக உன்னதப்பாட்டை வியாக்கியானம் செய்பவர்கள் அனைவரும் இப்புத்தகத்தின் செய்தி ஆவிக்குரியது என்று கூறினாலும், புத்தகத்தின் விடயங்கள் ஒவ்வொன்றும் எதைக் குறிக்கின்றது என்பது பற்றி இவர்கள் கருத்து முரண்பாடுடையவர்களாகவே இருக்கின் றனர். இதனால், ஒவ்வொரு வசனத்திற்கும் எவர் கொடுக்கும் விளக்கம் சரியானது என்பதை அறிந்து கொள்ள முடியாமல் உள்ளது. உதாரணத்திற்கு உன்னதப்பாட்டு 4:5ல் சித்தரிக்கப்பட்டுள்ள பெண்ணின் மார்பகங்களை[22] யூதர்கள் வியாக்கியானம் செய்யும் போது, சிலர் இவையிரண்டும் மோசேயையும் ஆரோனையும் குறிப்பதாக விளக்கியுள்ள போதிலும், ஏனையவர்களில் சிலர் இவற்றை மோசேயும் பினெகாஸ்சும் என்றும், வேறு சிலர் யோசுவாவும் எலெயேசரும் என்றும், இன்னும் சிலர் மேசியா தாவீதின் குமாரனாகவும் எப்பிராயீமின் குமாரனாகவும்[23] இருப்பதை அறியத்தரு வதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.[24] இதைப் போலவே கிறிஸ்தவர்கள் இவ்வசனத்தை வியாக்கியானம் செய்யும் போதும், பெண்ணின் மார்பகங்கள் இரண்டும் நாம் ஆவிக் குரிய உணவை உட்கொள்ளும் சபை என்று சிலர் கூறுகையில், வேறு சிலர் இவை இரண்டையும் வேதாகமத்தின் இரு ஏற்பாடுகளாகவும், தேவனுடைய இரு பிரதான கற்பனைகளான தேவனையும் அயலானையும் நேசிக்கும் கட்டளைகளாகவும், இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிக்கும் போது அவரது விலாவிலிருந்து வந்த இரத்தமாகவும் தண்ணீராகவும் இருப்பதாகவும் வியாக்கியனம் செய்துள்ளனர்.[25] இவையிரண்டும் விசுவாசி தேவனோடு இணைவதற்கு உதவியாயிருக்கும் அவனது விசுவாசமும் அன்பும் என்றும் சிலர் விளக்கியுள்ளனர்.[26] இதனால் உன்னதப்பாட்டு

---

[22] மார்பகங்களே நாம் உபயோகிக்கும் தமிழ் வேதாகமத்தில் “ஸ்தனங்கள்” என்று குறிப்பிடப்பட்டுள்ளன.

[23] யூத மதப் போதகர்கள் இங்கு யூத ராட்சியத்தைக் குறிப்பிட தாவீதின் பெயரையும், வட ராட்சியமான இஸ்ரவேலைக் குறிப்பிட எப்பிராயீமின் பெயரையும் உபயோகித்துள்ளனர். இஸ்ரவேல் ராட்சியம் கி.மு.930ல் இரண்டாகப் பிரிவடைந்தது. இஸ்ரவேலின் தென் ராட்சியத்தில் யூதா கோத்திரமே பெரிய தாக இருந்தமையாலும், நாட்டின் அரசன் அக்கோத்திரத்தைச் சேர்ந்தவனாக இருந்தமையாலும் (1ராஜா. 12:22-24), இது “யூதா ராட்சியம்” என்று அழைக்கப்படலாயிற்று. வட ராட்சியம் பொதுவாக இஸ்ரவேல் என்றே அறியப்பட்டிருந்தாலும் சில சந்தர்ப்பங்களில் எப்பிராயீம் என்றும் அழைக்கப்பட்டது. வடராட்சி யத்தின் முதல் அரசன் எப்பிராயீம் கோத்திரத்தைச் சேர்ந்தவனாக இருந்தமையாலும் (1ராஜா.11:26) இக்கோத்திரம் அதிக பலமிக்கதாய் இருந்தமையாலும் இப்பெயர் சில சந்தர்ப்பங்களில் வடராட்சியத் திற்கு உபயோகிக்கப்பட்டது. (C.H.Dyer, *Ezekiel: The Bible Knowledge Commentary Old Testament*, p. 1299). கி.மு.722ல் வடராட்சியம் அசீரியர்களினால் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் தென் ராட்சியமும் சில சந்தர்ப்பங்களில் இஸ்ரவேல் என்று அழைக்கப்பட்டது (J.B.Taylor, *Ezekiel: Tyndale Old Testament Commentaries*, p. 240).

[24] Cited in D.F.Kinlaw, *Song of Songs: The Expositor’s Bible Commentary Volume 5*, p. 1203. யூதமதப் போதகரான Ibn Ezra உன்னதப்பாட்டு 7:2ஐ வியாக்கியானம் செய்யும் பொது, பெண்ணின் “தொப்புழ்” (நாம் உபயோகிக்கும் தமிழ் வேதாகமத்தில் இதை ‘நாபி’ என்று குறிப்பிட்டுள்ளனர்) ‘யூதர்களுடைய பெரிய ஆலோசனைச் சங்கம்’ என்றும், அதில் நிறைந்திருக்கும் திராட்சைரசம் ‘நியாயப்பிரமாணம்’ என்றும், “கோதுமை அம்பாரம் போன்ற வயிறு” சிறிய ஆலோசனைச் சங்கம் என்றும் குறிப்பிட்டுள்ளார் (Cited in H.H.Rowley, “Interpretation of the Song of Songs” in *The Servant of the Lord and Other Essays*, p. 193).

[25] *Ibid*. p. 1203.

[26] W.Nee, *Song of Songs*, p. 77.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

4:5ற்கு எவ்விளக்கம் சரியானது என்பதை அறியமுடியாத நிலை தோன்றியுள்ளதை மறுப்பதற்கில்லை.

உன்னதப்பாட்டிற்கு கிறிஸ்தவர்கள் மத்தியில் இருக்கும் மறைபொருள் அர்த்த விளக்கத்தின் பொதுவான அம்சங்களாக பின்வரும் வியாக்கியானங்கள் உள்ளன. 1:2ன் "வாயின் முத்தங்கள்" தேவனுடைய வார்த்தையையும், 1:5ல் "பெண்ணின் கறுப்பு நிறம்" பாவத்தையும், 7:7ன் "ஸ்தனங்கள்" விசுவாசியைப் போஷிக்கும் சபையின் உபதேசத்தையும், 4:11ன் "உதடுகள்" நியாயப்பிரமாணத்தையும் சுவிசேஷத்தையும், 6:11ன் "கொடிகள் பறக்கும் படை" சபை சாத்தானுக்கு எதிராகப் போரிட ஆயத்தமாக இருப்பதையும் உருவகிப்பதாகக் கருதப்படுகின்றது.[27] சிலர், 2:12ல் "காட்டுப் புறாவின் சத்தம்" அப்போஸ்தலர்களின் பிரசங்கத்தையும், 5:1ன் விவரணம் திருவிருந்தையும் குறிப்பதாக விளக்கியுள்ளனர்.[28] இவ்வசனத்தில் "நான் என் தோட்டத்தில் வந்தேன்" என்னும் வாக்கியத்தைச் சிலர் இயேசுகிறிஸ்து மனிதராக இவ்வுலகத்திற்கு வந்ததைப் பற்றிய விவரணமாகக் கருதுகின்றனர்.[29] உன்னதப்பாட்டு 7:2ல் "திராட்சைரசம் நிறைந்த தொப்புழ்" ஞானஸ்நானத் தொட்டியையும், திருவிருந்தின் ரசத்தையும் குறிப்பதாகவும் சிலர் விளக்கியுள்ளனர்.[30] ஆனால், இவ்விளக்கங்கள் சகல கிறிஸ்தவர்களினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்று கூறுவதற்கில்லை.[31]

உன்னதப்பாட்டின் ஒவ்வொரு வசனத்திற்கும் கிறிஸ்தவர்கள் தங்களுக்கு விருப்பமான விதத்தில் புதுப்புது வித்தியாசமான அர்த்தங்களைக் கொடுத்து வருவதனால் இன்று பெரும்பாலான வேதஆராய்ச்சியாளர்கள், மறைபொருள் அர்த்த விளக்கமுறையின் படியான வியாக்கியானம் உன்னதப்பாட்டிற்கு பொருத்தமற்றது என்பதையும், இது, உன்னதப்பாட்டின் செய்தியைத் தாறுமாறாக்கும் பிழையான வியாக்கியான முறை என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.[32] உன்னதப்பாட்டு புத்தகத்தை மறைபொருள் அர்த்த விளக்க முறையின்படி வியாக்கியானம் செய்பவர்கள், இதுவே புத்தகத்தை விளக்கும் சரியான முறை என்றும், நாம் இவ்விதமாக புத்தகத்தை வியாக்கியானம் செய்ய வேண்டும் என்பதே தேவனுடைய நோக்கம் என்றும் கூறுவதோடு, புத்தகத்தின்

---

[27] Cited in D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, p. 353.
[28] Cited in J.S.Deere, *Song of Songs: The Bible Knowledge Commentary Old Testament*, p. 1009.
[29] Cited in R.W.Orr, *Song of Songs: New International Bible Commentary*, p. 703.
[30] Cited in G.L.Carr, *The Song of Solomon: Tyndale Old Testament Commentaries*, p. 26.
[31] 16ம் நூற்றாண்டின் சபைச் சீர்திருத்தவாதி மாட்டின் லூத்தர், அதுவரை காலமும் சபையில் இருந்து வந்த மறைபொருள் அர்த்தவிளக்க முறையை ஏற்றுக்கொள்ளாத போதிலும், உன்னதப்பாட்டை வியாக்கியானம் செய்யும் போது, தனது காலத்தின் நிலயை அடிப்படையாகக் கொண்டு, 1:2ன் "வாயின் முத்தம்" தேவனுடைய வாாத்தை என்றும், 1:5ன் "கறுப்பு நிறம்" பாவம் என்றும், 2:11ன் "மாரிகாலம்" பிழையான போதனைகள் என்றும் குறிப்பிட்டுள்ளார் (*Luther's Works Volume 15*, pp. 196-264). உன்னதப்பாட்டின் மணப்பெண்ணை லூத்தர் அரசாங்கத்தை உருவகிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார் (G.W.Bromiley, ed., *The International Standard Bible Encyclopedia Volume One*, p. 606). அக்காலத்தைய இன்னுமொரு சீர்திருத்தவாதியான ஜோன் கல்வின் உன்னதப்பாட்டு புத்தகத்திற்கு விளக்கவுரை எழுதாவிட்டாலும், தனது உபதேசப் புத்தகத்தில் உன்னதப்பாட்டு 5:3ல் குறிப்பிடப்பட்டுள்ள "என் பாதங்களைக் கழுவினேன். நான் எப்படி அவைகளைத் திரும்பவும் அழுக்காக்குவேன்" என்னும் கூற்றை, மனந்திரும்பிய ஆத்துமாவின் வார்த்தைகளாக விளக்கியுள்ளார் (*Calvin's Institute*, III 16:4).
[32] S.C.Glickman, *A Song for Lovers*, p. 175.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

மறைபொருளான ஆவிக்குரிய அர்த்தத்தைக் கண்டுகொள்ளமுடியாத வியாக்கியானங்கள் மாம்சப்பிரகாரமானது என்று கருதுகின்றனர்.[33] "வேதாகமகால உருவகங்களையும், ஆவிக்குரிய மறைபொருட்களையும் அறியமுடியாததினாலேயே மறைபொருள் அர்த்தவிளக்கம் நிராகரிக்கப்படுகின்றது"[34] என்னும் குற்றச்சாட்டு தற்கால வேத ஆராய்ச்சியாளர்கள்மீது சுமத்தப்பட்டாலும், உன்னதப்பாட்டின் வசனங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள மறைபொருள் அர்த்தவிளக்கங்கள் ஒன்றுக்கொன்று முரணானவைகளாகவும், புத்தகத்தின் செய்தியைத் தாறுமாறாக்குபவைகளாகவுமே உள்ளன.

உன்மையில் வேதாகமத்தில் மறைபொருள் அர்த்தம் கொண்ட பகுதிகள் இருப்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், இவற்றின் அர்த்தம் மானிடக் கற்பனையாலும் ஊகத்தினாலும் உருவாக்கப்படும் வித்தியாசமான விளக்கங்களைக் கொண்டிராமல், ஒவ்வொன்றினதும் அர்த்தமும் என்ன என்பதை அறிந்து கொள்ளக்கூடிய விதத்தில் விளக்கங்களுடன் எழுதப்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். உதாரணத்திற்கு இயேசுகிறிஸ்துவின் போதனைகளில் "விதைப்பவனின் உவமை" மறைபொருள் அர்த்தம் கொண்ட ஒரு கதையாகும். ஆனால், இவ்வுவமையில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒவ்வொன்றும் எதைக் குறிக்கின்றது என்பதை நாம் அறிந்து கொள்வதற்காக, இயேசுகிறிஸ்துவே உவமையில் குறிப்பிடப்படும் ஒவ்வொன்றும் எதனைக் குறிக்கின்றது என்று விளக்கம் கொடுத்துள்ளார்.[35] ஆனால் உன்னதப்பாட்டில் இத்தகைய விளக்கங்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை. இதனால், நமது கற்பனையில் அல்லது ஊகத்தில் உன்னதப்பாட்டின் வசனங்களுக்கு புதுப்புது அர்த்தங்களைக் கொடுக்க முடியாது. வேதாகமத்தில் தேவனுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவைக் குறிக்கும் அடையாளங்களாக உள்ள சம்பவங்களில் மறைபொருள் அர்த்தம் இருப்பது பற்றி குறிப்பிடப்

---

[33] P.P.Parente, "The Canticle of Canticles in Mystical Theology" in *Catholic Biblical Quarterly*. 6 (1944), p. 150.

[34] *The Works of John Flavel Volume 6*, p. 450.

[35] இயேசுகிறிஸ்து சில உவமைகளுக்கு மறைபொருள் அர்த்தவிளக்க முறையின்படி விளக்கங்கள் கொடுத்துள்ளமையால், அவரது உவமைகள் எல்லாம் இவ்விதமாகவே வியாக்கியானம் செய்யப்பட வேண்டும் என்று கருதி, அவர் விளக்கம் கொடுக்காத உவமைகளுக்ககெல்லாம் நாம் நமது கற்பனையில் அர்த்தம் கற்பிக்கக்கூடாது. எனினும், அண்மைக்காலம் வரை, இயேசுகிறிஸ்துவின் உவமைகள் அனைத்தும் மறைபொருட்களைக் கொண்ட கதைகளாகவே கிறிஸ்தவர்களால் வியாக்கியானம் செய்யப்பட்டு வந்துள்ளன. இதற்குக் காரணம், விதைப்பவனுடைய உவமையை இயேசுகிறிஸ்து விளக்கிய முறையும், மத்தேயு 13:10-13, மாற்கு 4:10-12, லூக்கா 8:9-10 போன்ற வசனங்களில் இயேசுகிறிஸ்து குறிப்பிட்டவைகளுமாகும். ஆனால், லூக்கா 15:3, 19:11 போன்ற வசனங்கள், இயேசுகிறிஸ்து மறைபொருட்களையே உவமைகளாகச் சொன்னார் என்னும் கருத்தை முரண்படுத்துகின்றது. மேலும், மத்தேயு 21:45, லூக்கா 10:25-37 போன்ற வசனங்கள், இயேசுகிறிஸ்து சொல்லிய உவமைகளை மக்கள் விளங்கிக் கொண்டதை அறியத்தருகின்றன. மத்தேயு 13:10-13, மாற்கு 4:10-12, லூக்கா 8:9-10 போன்ற வசனங்களில் இயேசுகிறிஸ்து சொல்வதை சரியானவிதத்தில் விளங்கிக் கொள்வதற்கு, "உவமை" என்னும் பதத்தை அவர் என்ன அர்த்தத்தோடு உபயோகித்துள்ளார் என்பதை நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். உண்மையில், "பரபோலி" (*parabole*) என்னும் கிரேக்க பதமே இவ்வசனங்களில் உவமை என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள போதிலும், இயேசுகிறிஸ்து அரமிக் மொழியிலேயே பேசினார் என்பதை நாம் மறக்கலாகாது. இயேசுகிறிஸ்துவின் கூற்றில் அரமிக்மொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "மெத்ஹ்லா" (*mathla*) என்னும் பதம் பலவிதமான அர்த்தங்களைக் கொண்டுள்ளது. பழமொழி, மரபுத்தொடர், உருவகவிவரணம், ஒப்புவமை, உவமை, மறைபொருட்கதை, விடுகதை, புதிர் போன்றவை அனைத்தையும் குறிப்பிட இப்பதமே உபயோகிக்கப்பட்டது. ஆனால் இப்பதம் கிரேக்கத்தில் "பரபோலி" என்று குறிப்பிடப்பட்டுள்ளமையால், அரமிக் மொழிச்சொல்லால் குறிப்பிடப்படும் அனைத்தையும் உவமை என்று கருதி, கிறிஸ்வத சபை சகல உவமைகளையும் ஒரேவிதமாக, அதாவது மறைபொருள் கதைகளாகவே வியாக்கியானம் செய்து வந்துள்ளது. (D.Wenham, *The Parables of Jesus*, pp. 225-245). உவமை என்பதற்கு இயேசுகிறிஸ்து உபயோகித்த அரமிக் மொழிப் பதம், பலதரப்பட்ட உருவகவிவரணங்களைக் குறிப்பிதனால், இயேசுகிறிஸ்துவின் உவமைகளாக வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருப்பவை அனைத்தையும் மறைபொருட்கதைகளாகக் கருதுவது தவறாகும்.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

பட்டுள்ளதை எசேக்கியேல் 16:3, ஓசியா 1-3 போன்ற பகுதிகளில் நாம் அவதானிக்க லாம். ஆனால் இத்தகைய குறிப்புகள் உன்னதப்பாட்டில் இல்லை. வேதாகமத்தின் வேறு பகுதிகளில் தேவனுக்கும் இஸ்ரவேலருக்கும் இடையிலான உறவு கணவன் மனைவி உறவு முறையின் மூலம் சித்தரிக்கப்பட்டிருக்கின்றது என்பதற்காக உன்னதப் பாட்டும் இவ்வித உருவக விவரணமாகவே உள்ளது என்று கூறுவது அர்த்தமற்ற தர்க்கமாகும். எனவே, உன்னதப்பாட்டை மறைபொருட்கள் கொண்ட விவரணமாகக் கருதமுடியாது.[36] மேலும், உன்னதப்பாட்டு இத்தகைய முறையில் வியாக்கியானம் செய்யப்பட வேண்டும் என்பதற்கு புதிய ஏற்பாட்டிலும் எவ்வித ஆதாரங்களும் இல்லை.[37] இயேசுகிறிஸ்துவோ, அப்போஸ்தலர்களோ உன்னதப்பாட்டை மறைபொருட் கள் கொண்ட கதையாக விளக்குவதற்கு எவ்வித ஆதாரக் குறிப்பையும் தரவில்லை.[38]

---

[36] S.C.Glickman, *A Song for Lovers*, p. 175. உன்னதப்பாட்டைப் போன்ற காதல் பாடல்கள் தேவனுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவை வர்ணிக்கும் பாடல்களாக வியாக்கியானம் செய்யப்படவேண்டும் என்பதற்கு ஏசாயா 5:1-7 இருப்பதாக சிலர் வாதிடுகின்றனர் (F.Landy, "The Song of Songs and the Garden of Eden" in *Journal of Biblical Literature*, pp. 513-528; B.G.Webb, *Five Festal Garments*, p. 28). ஆனால், ஏசாயா 5:1-7ஐக் காதல் பாடலாக வியாக்கியானம் செய்யமுடியாது. 1ம் வசனத்தில் இது தன் நேசருக்கான பாடல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 7ம் வசனத்தின்படி நேசர் கர்த்தர் என்பது தெளிவா கின்றது. எனினும், நேசருக்காகப் பாடும்பாடல் பெண் பாடும் பாடலாக இல்லை. "மூலமொழியில் பாடலைப் பாடுபவர் ஆண்பாலில் குறிப்பிடப்பட்டுள்ளமையால், இதை நேசருக்கான பாடல் என்றல்ல, நண்பனுக்கான பாடல் என்றே மொழிபெயர்க்க வேண்டும்" (J.D.W.Watts, *Isaiah 1-33: Word Biblical Commentary Volume 24*, p. 53). உண்மையில் இது மணவாளனின் தோழன் பாடும் பாடலாகவே உள்ளது. அதுவும், இது மணமகளின் நிலை குறித்து மணவாளனின் தோழன் மணவாளனிடம் முறையிடும் பாடலாகவே உள்ளது. இதனால், இது காதல் பாடலாக அல்ல "ஒரு புலம்பலாகவே உள்ளது" (J.Goldingay, *Isaiah: New International Biblical Commentary*, p. 52). எனவே உன்னதப்பாட்டை தேவனுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையிலான உறவைச் சித்தரிக்கும் காதல் பாடலாக வியாக்கியானம் செய்வதற்கு ஏசாயாவின் பாடல் ஆதாரமாய் இருப்பதாகக் கூறமுடியாது. மேலும், ஏசாயாவின் பாடலில் 7ம் வசனத்தில் திராட்சைத் தோட்டம் இஸ்ரவேல் என்பது தெளிவாகவும் நேரடியாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால், உன்னதப்பாட்டில் மணப்பெண்ணை (அல்லது காதலியை) இஸ்ரவேலாக வியாக்கியானம் செய்வதற்கு எவ்வித ஆதாரக் குறிப்புகளும் இல்லை. வேதத்தின் ஒரு பகுதியில் உருவக விவரணம் இருக்கின்றது என்பதற்காக, இத்தகைய விவரணமே வேதாகமத்தின் சகல பகுதிகளிலும் இருக்கின்றது என்று கூறுவது அாத்தமற்றது. வேதாகமத்தின் சில பகுதிகளில் இஸரவேலுக்கும் தேவனுக்கும் இடையிலான உறவு மணமகனுக்கும் மணமகளுக்கும் இடையிலான உற வாகச் சித்தரிக்கப்பட்டிருப்பதனால், உன்னதப்பாட்டிலும் இவ்விதமாக விவரணமே இருக்கின்றது என்று கூறமுடியாது.

[37] D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, p. 355.

[38] பழைய ஏற்பாடானது புதிய ஏற்பாட்டின் அடிப்படையிலேயே வியாக்கியானம் செய்யப்படவேண்டும். அதாவது, புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள முழுமையான வெளிப்படுத்தல், பழையஏற்பாட்டின் பகுதியளவிலான வெளிப்படுத்தலை விளங்கிக்கொள்ள உதவுகின்றது. உண்மையில் பழைய ஏற்பாட்டை எவ்வாறு வியாக்கியானம் செய்வது என்பதற்குப் புதிய ஏற்பாட்டில் பலதரப்பட்ட விளக்கங்கள் நேரடியாகவும், உதாரணங்களுடனும் உள்ளன (R.B.Zuck, *Basic Bible Interpretation*, pp. 250-278). ஆனால், உன்னதப்பாட்டை மறைபொருட்கள் கொண்ட கதையாக வியாக்கியானம் செய்ய வேண்டும் என்று புதிய ஏற்பாடு போதிக்கவில்லை. ஆனால், பவுல் கலாத்தியர் 4:21-31ல் பழைய ஏற்பாட்டுச் சரிதையின் ஒரு பகுதியை மறைபொருட்கள் உள்ள கதையாக விளக்கியுள்ளதை இன்று பலர் மறைபொருள் ஆத்த விளக்கத்தை நியாயப்படுத்தவதற்காக உபயோகித்து வருகின்றனர். உண்மையில் பவுல் இங்கு, ஆபிரகாமின் வாழ்வைப் பற்றி குறிப்பிடும் போது, "இவை ஞானஅர்த்தமுள்ளவைகள்" (கலா.4:24) என்னும் அறிமுகத்துடன் அவரது இரு மனைவிகளையும் இரு உடன்படிக்கைகளாகவும், அவர்களில் ஒருத்தியை சீனாய் மலையாகவும், மற்றவளை பரம எருசலேமாகவும் சித்தரித்தள்ளார் (கலா.4:24-25). எனினும், 24ம் வசனத்தில் "இவை ஞானஅர்த்தமுள்ளவைகள்" என்னும் சொற்பிரயோகம், மூலமொழி யின் இலக்கண அமைப்பு முறையின்படி "இவை ஞானஅர்த்தமுள்ளவைகளாக விளக்கப்படுகின்றன" என்று மொழிபெயர்க்கப்படவேண்டும் (R.N.Longenecker, *Galatians: Word Biblical Commentary Volume 41*, p. 210). உண்மையில், பவுல் ஆவிரகாமின் வாழ்வை மறைபொருட்கள் கொண்ட கதையாக விளக்க வில்லை. ஆனால், கலாத்திய சபையினரைக் குழப்பிய வேதப் புரட்டர்கள் தங்களது உபசேத்திற்கு ஆதாரம் காட்டுவதற்காக அக்காலத்தில் பிரபலமாயிருந்த மறைபொருள் ஆத்தவிளக்கத்தின்படி ஆபிரகா மின் வாழ்வுச் சரிதையை வியாக்கியானம் செய்து வந்தனர். இதை 24ம் வசனத்தில் கலாத்தியருக்கு சுட்டிக்காட்டும் பவுல், அதனைத் தொடர்ந்து வரும் வசனங்களில், வேதப்பரட்டர்களின் வியாக்கியானத் தைத் திருத்துவதோடு, வேதப்புரட்டர்களின் வியாக்கியான முறையின்படியே அவர்களுக்கு பதில் கொடுத்துள்ளார் (L.Morris, *Galatians: Paul's Charter of Christian Freedom*, p. 146). எனவே இங்கு பவுல் பழைய ஏற்பாட்டு சரித்திரத்தை மறைபொருட்கள் கொண்ட கதையாக வியாக்கியானம் செய்யவில்லை. மாறாக, மறைபொருட்கள் கொண்ட வேதப்புரட்டர்களின் தவறான விளக்கத்தைத் திருத்தியுள்ளார்.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

உண்மையில், உன்னதப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள உரையாடல்கள் தேவனும் மனிதரும் பேசுவதான உரையாடல்களாக இல்லை. “தேவனும் மனிதனும் காதல் வசப்பட்ட ஒரு ஆணும் பெண்ணும் பேசுவது போல பேசுவதும், சரீர அவயவங்களை பாலியல் உணர்வுடன் வர்ணித்து மகிழ்வதும், தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான புனித உறவைக் களங்கப்படுத்தும் செயல்களாகும்.”[39] உன்னதப்பாட்டின் முதல் வரியே, அதாவது, “அவர் தமது வாயின் முத்தங்களினால் என்னை முத்தமிடுவாராக” என்னும் கூற்றே (உன்.1:2) இது தேவனுக்கும் மனிதருக்கும் இடையிலான உறவைப் பற்றிய பாடல் அல்ல என்பதை அறியத்தருகின்றது.[40] அதேபோல, உன்னதப்பாட்டில் ஆணும் பெண்னும் ஒருவரது அழகை மற்றவர் வர்ணிக்கும் முறை தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான உரையாடலுக்கு எவ்விதத்திலும் பொருத்தமற்றவையாகவே உள்ளன.[41] உண்மையில், பெண்ணின் அழகை வர்ணிக்கும் பகுதிகளை இயேசு கிறிஸ்து சபையைப் பார்த்து கூறுகிறார் என்பது அர்த்தமற்ற விளக்கமாகவே உள்ளது.[42] மானிடக் காதல் மொழிகள் தேவனுடனான உறவிற்குப் பொருத்தமற்றவை என்பதை நாம் மறக்கலாகாது. பாலியல் உணர்வுகளைத் தூண்டும் விதத்தில், மதுபோதையில் ஆண்களும் பெண்களும் ஆடிப் பாடி தெய்வத்தை வழிபடும் முறைகள் புராதன கால மதச் சடங்காச்சாரங்களிலேயே உள்ளன.[43] ஆனால், வேதாகமத்தில் தம்மை வெளிப்படுத்தியுள்ள தேவனை இவ்வாறு வழிபடமுடியாது.[44] இதனால், மானிடக் காதல் மொழிகளை உள்ளடக்கிய உன்னதப்பாட்டை தெய்வத்திற்கும் மனிதனுக்கும் இடையிலான உறவைப் பற்றிய பாடலாக விளக்கமுடியாது. “சபையைக் கிறிஸ்துவின் மணவாட்டியாக வேதாகமம் உவமித்தாலும், இவ்வுறவை சரீர அழகைப் புகழும் வர்ணனைகளினாலும், பாலியலோடு சம்பந்தப்பட்ட வார்த்தைகளினாலும் வேதாகமம் சித்தரிக்கவில்லை”[45] என்பதை நாம் மறக்கலாகாது.

---

39 D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, p. 357.

40 *Ibid*. p. 357.

41 R.Davidson, *Ecclesiastes and Song of Solomon: The Daily Study Bible*, p. 95. உதாரணத்திற்கு தேவன் மனிதனைப் பாத்து “ராஜகுமாரத்தியே, பாதரட்சைகளிட்ட உன் பாதங்கள் மிகவும் அழகாயிருக்கிறது. உன் இடுப்பின் வடிவு விசித்திர தொழிற்காரரின் வேலையாகிய பூஷணம் போலிருக்கிறது. உன் நாபி திராட்சை ரசம் நிறைந்த வட்டக் கலசம் போலிருக்கிறது. உன் வயிறு லீலி புஷ்பங்கள் சூழ்ந்த கோதுமை அம்பாரம் போலிருக்கிறது. உன் இரண்டு ஸ்தனங்களும் வெளிமான் இரட்டைக் குட்டிகளுக்குச் சமானமாயிருக்கிறது” (உன்.7:1-3) என்று கூறுவதும், மனிதன் தேவனிடம் “என் நேசர் வெண்மையும் சிவப்புமானவர். பதினாயிரம் பேர்களில் சிறந்தவர். அவர் தலை தங்கமயமாயிருக்கிறது. அவர் தலைமயிர் சுருள் சுருளாயும், காகத்தைப் போல் கருமையாயுமிருக்கிறது” (உன்.5:10-11) என்று பேசுவதும் எவ்விதத்திலும் பொருத்தமற்றதாகவே உள்ளது. தேவனுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான உரையாடல் இத்தகைய மொழிநடையில் இருப்பதாக வேதாகமத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை.

42 C.D.Ginsburg, *The Song of Songs*, p. 181. உன்னதப்பாட்டு, 7:6-9ல் “மனமகிழ்ச்சியை உண்டாக்கும் என் பிரியமே, நீ எவ்வளவு ரூபவதி, நீ எவ்வளவு இன்பமுள்ளவள். உன் உயரம் பனைமரத்தொழுங்கு போலவும், உன் ஸ்தனங்கள் திராட்சைக் குலைகள் போலவும் இருக்கிறது. நான் பனை மரத்திலேறி, அதின் மடல்களைப் பிடிப்பேன்” என்று இயேசுகிறிஸ்துவினால் சபையைப் பார்த்து கூறமுடியுமா? அதேபோல உன்னதப்பாட்டு 4:1-5, 7:2-9 போன்ற பகுதிகளையும் சபையைப் பாத்து இயேசுகிறிஸ்துவினால் கூறமுடியாது.

43 M.H.Pope, *The Song of Songs: Anchor Bible Commentary*, pp. 158-179.

44 தேவனைப் பாலியல் வார்த்தைகளினால் அல்ல அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் என்றே வேதாகமம் அறிவுறுத்தியுள்ளது. தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்வதைப் பற்றிய விபரங்களுக்கு எனது “ஆத்தும தாகத்திற்கு அற்புதத் தண்ணீர்” என்னும் நூலின் 71 முதல் 89 வரையிலான பக்கங்களைப் பார்க்கவும்.

45 D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, p. 355.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

கிறிஸ்தவ இலக்கியங்களில் “ஜோன் பனியன்” எழுதிய “மோட்சப் பிரயாணம்” மறைபொருட்கள் கொண்ட ஒரு காவியமாக உள்ளது. இதனால்தான், இக்கதையில் வரும் நபர்களுக்கும் இடங்களுக்கும் சிறப்பான அர்த்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் உன்னதப்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் இடங்களுக்கும் நபர்களுக்கும் சிறப்பான அர்த்தங்கள் பாடலில் கொடுக்கப்படவில்லை. இவை சொல்லர்த்தமாகவே குறிப்பிடப்பட்டுள்ளமையால், மறைபொருள் அர்த்தங்கள் கொண்ட கதைகளில் வரும் கற்பனைக் கதாபாத்திரங்களைப் போல அவற்றிற்கு நம்மால் அர்த்தங்களைக் கொடுக்க முடியாது.[46] உன்னதப்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் இடங்கள் அனைத்தும் பலஸ்தீனாவில் உள்ள பூகோளரீதியான உண்மையான பிரதேசங்களாக இருப்பதனால், இதை எவ்விதத்திலும் மறைபொருட்கள் கொண்ட காவியமாகக் கருதமுடியாது.[47]

யூதர்களும் கிறிஸ்தவர்களும் நீண்டகாலமாக உன்னதப்பாட்டை மறைபொருட்கள் கொண்ட பாடலாகவே வியாக்கியானம் செய்து வந்துள்ளமையால் நாமும் அவ் விதமாகவே இப்புத்தகத்தை விளங்கிக்கொள்ளவேண்டும் என்று கருதுவது தவறாகும். கி.பி.16ம் நூற்றாண்டில் சபை சீர்திருத்தப்படும் வரை ரோம சபையில் இருந்த உபதேசங்களில் பலவற்றை இன்று ரோமன் கத்தோலிக்க சபை தவிர்ந்த ஏனைய சபைகள் சரியானவை என்று ஏற்றுக்கொள்வதில்லை. அவற்றைப் பல கிறிஸ்தவ சபைகள் பிழையானவையாகவே கருதுகின்றன. உண்மையில் வேதப் பகுதிகளை மறைபொருள் அர்த்தம் கொண்ட கதைகளாக வியாக்கியானம் செய்வதும் அக்கால ரோம சபையில் இருந்த தவறான ஒரு முறையாகவே உள்ளது. ஏனென்றால் இது கிரேக்கர்கள் தங்களது புராணங்களை வியாக்கியானம் செய்த முறையாகும், உண்மையில், “இது புராணத் தெய்வங்களினதும், சரித்திர புருஷர்களினதும் ஒழுக்கக் கேடான பாலியல் வாழ்வைச் சித்தரிக்கும் பகுதிகளை, அறிவியல் ரீதியாக சிந்திக்கும் மக்கள் அருவருப்பாக எண்ணாமல் இருப்பதற்காக உருவாக்கப்பட்ட வியாக்கியான முறையாகும்.”[48] முதலாம் நூற்றாண்டு யூதர்களும், பிற்கால கிறிஸ்தவர்களும், கிரேக்கர்களது வியாக்கியான முறையின் செல்வாக்கிற்கு உட்பட்டவர்களாகவே வேதாகமத்தை மறைபொருட்கள் கொண்ட கதைகளாக விளக்கத் தொடங்கினர்.[49] இது

---

[46] D.F.Kinlaw, *Song of Songs: The Expositor's Bible Commentary Volume 5*, p. 1203.

[47] G.L.Carr, *The Song of Solomon: Tyndale Old Testament Commentaries*, p. 23.

[48] D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, p. 355. கிரேக்கர்கள் மத்தியில் தத்துவ போதனைகள் அதிகரித்த காலகட்டத்தில், மார்க்க நூல்களில் உள்ள தெய்வங்களைப் பற்றிய கதைகள் அவர்களுக்கு அறிவீனமானவைகளாகத் தென்பட்டமையால், மக்கள் மத்தியில் அவற்றிற்கு இருந்த மதிப்பு குறைவடையத் தொடங்கியது. இதனால் அவர்கள் தங்கள் மார்க்க நூல்களில் சொல்லப்பட்டவைகளுக்கு மறைமுக அர்த்தம் இருக்கின்றது என்று கூறி, அவற்றில் சொல்லர்த்தமாய் சொல்லப்பட்டவைகளுக்கும், புராணக் கதைகளுக்கும் வேறு அர்த்தங்களைக் கற்பிக்கத் தொடங்கினர். இத்தகைய விளக்கமுறை நாளடைவில் எகிப்திலுள்ள அலெக்சாந்திரியா பட்டணத்தில் வாழ்ந்த யூதர்கள் மத்தியிலும் வேகமாகப் பரவத் தொடங்கியது. இதனால் அவர்கள் தங்களது மார்க்க நூலான பழைய ஏற்பாட்டையும் இவ்விதமாக வியாக்கியானம் செய்யத் தொடங்கினர்.

[49] கிரேக்கர்கள் மத்தியில் பிளேட்டோவின் தத்துவப் போதனைகள் பிரபலமடைந்த பின்னர், மானிட சரீரம் தீமையானது, ஆவியே தூய்மையானது என்னும் கருத்து உருவானது. இதனால், மானிட ஆவி தீமையான சரீரத்தில் சிறைப்பட்டிருக்கின்றது என்றும், ஆவியை இச்சிறையிலிருந்து விடுவிப்பதே மதங்களினதும் தத்துவப் போதனைகளினதும் தாற்பரியமாய் மாறியது. சிலர் சரீரப்பிரகாரமாக நாம் எப்படி வாழ்ந்தாலும், அது ஆவிக்குரிய வாழ்வைப் பாதிக்காது என்று கருதிய போதிலும், பெரும் பாலானவர்கள், சரீர ஆசைகளை ஒடுக்கிக் கட்டுப்படுத்தும் துறவறவாழ்வே மானிட ஆத்துமாவிற்கு விடுதலையைப் பெற்றுக் கொடுக்கும் என்று கருதினர். இதனால் திருமணம், பாலுறவு என்பன பாவமான செயல்களாகக் கருதப்பட்டது. ஆதிச்சபைப் பிதாக்களும் இத்தகைய தத்துவப் போதனைகளின்


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

யூத மற்றும் கிறிஸ்தவர்கள் மத்தியில் ஆரம்பத்திலிருந்து இருந்த வேத வியாக்கியான முறை அல்ல. இயேசுகிறிஸ்துவோ அப்போஸ்தலர்களோ வேதாகமத்தை (பழைய ஏற்பாட்டை) இவ்வாறு வியாக்கியானம் செய்யவில்லை.

ஆரம்பத்தில் யூதர்களும் கிறிஸ்தவர்களும் உன்னதப்பாட்டை காதல் பாடலாகவே வியாக்கியானம் செய்து வந்தனர்.[50] ஆனால், பிற்காலத்தில் வேதாகமத்தில் இருக்கும் ஒரு புத்தகத்தை மானிடக் காதலைப் பாடலாக விளக்கக்கூடாது என்னும் எண்ணத்தில், அக்காலத்தில் பிரபலமாயிருந்த கிரேக்கர்களின் வியாக்கியான முறையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட வியாக்கியானமாகவே மறைபொருள் அர்த்த விளக்கம் உள்ளது. இது மானிட கற்பனையில் உருவாக்கப்பட்ட விளக்கமாக இருப்பதனாலேயே, இதுவரை காலமும் ஒவ்வொரு வசனத்திற்கும் நூற்றுக்கணக்கான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உண்மையில் கி.பி.முதலாம் நூற்றாண்டிலேயே உன்னதப்பாட்டு புத்தகம் வேதாகமத்தில் இருப்பதற்குத் தகுதியானதா இல்லையா என்னும் தர்க்கம் யூதர்கள் மத்தியில் உருவானது. அக்காலத்தைய பிரபல யூத மதப் போதகரான "ரபி அக்கிபா" என்பார், உன்னதப்பாட்டுப் புத்தகத்தைக் காதல் பாடலாகப் பாடக்கூடாது என்று கூறியதோடு, இப்புத்தகம் "மனிதருக்கு கொடுக்கப்பட்ட தினத்தைப் போல சிறப்பான நாள் உலகத்தில் இருந்ததில்லை. வேதத்திலுள்ள புத்தகங்கள் எல்லாமே பரிசுத்தமானவை. ஆனால் உன்னதப்பாட்டு, மகா பரிசுத்தமானது"[51] என்று அறிவித்தார். இதனால், அக்காலத்தில் இது ஆவிக்குரிய புத்தகம் அல்ல என்னும் கருத்து யூதமத போதகர்கள் மத்தியில் உருவானது.[52] இதனால் இப்புத்தகம் வேதாகமத்தில் இருப்பதற்குத் தகுதியானதா இல்லையா என்பது பற்றிய தர்க்கமும் அக்காலத்தில் யூதர்கள் மத்தியில் இருந்தது.[53] எனினும், இறுதியில், புத்தகத்தை தேவனுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையிலான உறவைச் சித்தரிக்கும் பாடலாக வியாக்கியானம் செய்து, இதன் அடிப்படையில் இப்புத்தகம் வேதாவாக்கி

---

செல்வாக்கிற்கு உட்பட்டவர்களாக திருமண வாழ்வையும் பாலுறவையும் துறந்து வாழத் தொடங்கினர். இதனால் அவர்கள் மானிடக் காதலையும் திருமண வாழ்வையும் பற்றிய உன்னதப் பாடலை நேரடியாக, சொல்லாத்தமாக வியாக்கியானம் செய்யமுடியாதவர்களாக, அக்காலத்தில் கிரேக்கர்கள் மத்தியில் பிரபலமடைந்திருந்த மறைபொருள் அர்த்தவிளக்க முறையின்படி உன்னதப்பாட்டை வியாக்கியானம் செய்தனர் (M.H.Pope, *Song of Songs: Anchor Bible Commentary*, p. 115).

50 D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, p. 365. கி.பி.முதலாம் நூற்றாண்டில் யூதமதப்போதகரான ரபி அக்கிபா உன்னதப்பாட்டைக் காதல் பாடலாகப் பாடவேண்டாம் என்று கட்டளையிட்டதற்குக் காரணம், அதற்கு முற்பட்ட காலத்தில் யூதர்கள் இதைக் காதல் பாடலாகப் பாடிவந்தமையே ஆகும். மேலும், யூத வரலாற்றாசிரியர் ஜோசீப்பஸ் என்பாரும் உன்னதப்பாட்டு காதல் பாடலாக இருப்பதாகவே குறிப்பிட்டுள்ளார். ஆரம்பகாலத்தில் அந்தியோகிய சபையைச் சேர்ந்தவர்களும் உன்னதப்பாட்டை இவ்விதமாகவே வியாக்கியானம் செய்தார்கள். ஆனால், பிற்காலத்தில் மறைபொருள் அர்த்தவிளக்கமுறை சபைக்குள் புகுந்தமையால், கி.பி.553ல் கொன்ஸ்தாந்திநோபிள் என்னும் இடத்தில் கூடிய சபையின் ஆலோசனைச் சங்கக் கூட்டத்தில், வேதாகமத்தை சொல்லர்த்தமாக வியாக்கியானம் செய்யும் அந்தியோகிய சபையின் வியாக்கியான முறையைத் தவறு என்று கூறினார்கள் (G.Fohrer, *Introduction to the Old Testament*, p. 300).

51 யூதமத நூலான மிஷ்னாவில் இது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது (Mishnah *Yadaim* 3.5). ரபி அக்கிபாவின் காலத்திற்குப் பின்னர், அதாவது இரண்டாம் நூற்றாண்டில் யூதர்கள் மத்தியில் உன்னதப்பாட்டை மறைபொருட்கள் கொண்ட காவியமாக வியாக்கியானம் செய்யும் முறை பிரபலமடைந்தது (A.C.Myers, ed., *The Eerdmans Bible Dictionary*, p. 963).

52 B.G.Webb, *Five Festal Garments*, p. 27.

53 G.L.Archer, *A Survey of Old Testament Introduction*, p. 78. அக்காலத்தில் உன்தப்பாட்டு மட்டுமல்ல, பிரசங்கி, எஸ்தர், நீதிமொழிகள், எசேக்கியேல் என்னும் புத்தகங்களும் சாச்சைக்குரியவைகளாகவே இருந்தன (H.H.Rowley, *The Growth of the Old Testament*, p. 170; R.K.Harrison, *Old Testament Introduction*, p. 278).


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

யமாக இருப்பதாக யூதமதப் போதகர்கள் விளக்கம் கொடுத்தனர். எனினும் மறை பொருட்கள் கொண்ட பாடலாக இருந்ததினால் இப்புத்தகம் வேதவாக்கியமாகியது என்று கருதுவது தவறாகும்.[54] உண்மையில் இப்புத்தகம் வேதாகமத்தில் இருந்ததினா லேயே பிற்காலத்தில் மறைபொருள் ஆத்தவிளக்க முறையின்படி வியாக்கியானம் செய்யப்பட்டது.[55]

கிறிஸ்தவ சபையைப் பொருத்தவரை கி.பி.3ம் நூற்றாண்டிலேயே உன்னதப்பாட்டை மறைபொருள் அர்த்தம் கொண்ட கதையாக வியாக்கியானம் செய்யும் முறை ஆரம்பமானது.[56] இது திருமணமும் பாலுறவும் பாவமானது என்னும் கருத்து கிறிஸ்தவ சபைக்குள் புகுந்த காலமாகும்.[57] பாலியலைப் பாவமாகக் கருதிய சபைப் பிதாக்கள், இவ்வாசையை நாம் வேறு பக்கமாகத் திருப்ப வேண்டும் என்று கூறியதோடு, இயேசுகிறிஸ்துவே நமது மணவாளன், எனவே அவருடனான உறவிலேயே நாம் இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்று போதித்தனர். இதனால், மானிடக் காதலைப் பற்றிய உன்னதப்பாட்டை ஆதிச் சபைப்பிதாக்கள் இயேசுகிறிஸ்துவிற்கும் சபைக்கும் இடையிலான உறவைப் பற்றிய பாடலாக வியாக்கியானம் செய்யத் தொடங்கினர். "மத்தியகால சபைபிதாக்கள், திருமணமுடித்து தங்கள் மனைவியை நேசித்து மகிழ்வதைத் துறந்து, உன்னதப்பாட்டு புத்தகத்தின் மூலம் இயேசுகிறிஸ்துவோடு உறவாடினர்."[58] இதனால் கிறிஸ்தவ திருச் சபையின் மத்திய காலத்தில் வேதாகமத் திலுள்ள 66 புத்தகங்களிலும் உன்னதப்பாட்டு புத்தகத்திலேயே அதிகமான பிரசங் கங்கள் செய்யப்பட்டுள்ளன.[59]

---

[54] B.S.Childs, *An Introduction to the Old Testament as Scripture*, p. 578.

[55] உன்னதப்பாட்டு புத்தகம் தேவனுக்கும் இஸ்ரவேலருக்கும் இடையிலான உறவைப் பற்றிய பாடலாக இருந்தமையால் கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த யூதர்கள் அதை வேதவாக்கியமாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனென்றால் ஏற்கனவே இப்புத்தகம் வேதவாக்கியமாகவே இருந்தது. ஆனால், வேதவாக்கியமாக இருந்த இப்புத்தகம் மானிடக் காதலைப் பற்றியதாய் இருந்தமையால் இதை எப்படி வேதவாக்கியம் என்று கூறமுடியும் என்னும் சர்ச்சைக்குப் பதிலாகவே, இதை தேவனுக்கும் இஸ்ரவேலருக்கும் இடையி லான உறவைப் பற்றிய பாடலாக யூதர்கள் வியாக்கியானம் செய்யத் தொடங்கினர். வேதாகமத்தில் இருக்கும் புத்தகங்களை நீக்குவதற்கோ, அல்லது, புதிய புத்தகங்களைச் சேர்ப்பதற்கோ அக்காலத்தில் யூதர்களுக்கு அதிகாரம் இருக்கவில்லை. F.F.Bruce

[56] கி.பி.235ல் மரணமடைந்த ரோமைச் சேர்ந்த ஹிப்போலெட்டஸ் (Hippolytus) என்பாரே முதல் தடைவ யாக உன்னதப்பாட்டை இவ்வாறு வியாக்கியானம் செய்த கிறிஸ்தவராவார். (R.E.Murphy, *The Song of Songs*, pp. 14-15). இதன் பின்னர் சபைப் பிதாக்கள் மத்தியில் உன்னதப்பாட்டின் இத்தகைய விளக்கம் பிரபலமடைந்தது.

[57] கி.பி.325ல் நைசியாவில் (Nicea) கூடிய ஆலோசனைச் சங்கத்தில், சபையின் மதகுருமார்கள் தங்கள் மனைவியுடன் ஒன்றாக இருப்பதைத் தடைசெய்யும் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. அச்சமயம் இத்தகைய சட்டம் கொண்டுவரப்படாவிட்டாலும், இச்சட்டம் பற்றி ஆலோசனைச் சங்கத்தில் சொல்லப்பட்டவைகள் குருமார்களால் பின்பற்றப்படத் தொடங்கின. பின்னர் கி.பி.386ல், சைரீசியஸ் (Siricius) என்னும் பிஷப், சகல குருமார்களும் பிரமச்சாரியாக வாழவேண்டும் என்று கட்டளையிட்டார். பிற்காலத்தில் குருமார்களின் உதவியாளர்களுக்கும் இக்கட்டளை கொடுக்கப்பட்டது. அக்காலத்தில் குருவானவர்களாக அபிஷேகிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் திருமணமுடித்தவர்களாகவே இருந்தமையால், கி.பி. 5ம் நூற்றாண்டில் லியோ என்னும் போப்பாண்டவர் குருமார்கள் தங்கள் மனைவிகளை விவாகரத்து செய்யக் கூடாது என்று கூறினாலும், அவர்கள் சகோதர சகோதரிகளைப் போல, பாலுறவைத் தவிர்த்து வாழ வேண்டும் என்று கட்டளையிட்டார். அதன்பின்னர் தாங்கள் பாலுறவில் ஈடுபடாமல் இருப்போம் என்று வாக்குறுதியளிப்பவர்களை மட்டுமே சபை குருவானவர்களாக அபிஷேகித்தது. ஆனால் நாளடைவில், திருமணமுடிக்காத பிரமச்சாரிகள் மட்டுமே குருவாக அபிஷேகிக் கப்பட முடியும் என்னும் சட்டம் சபைக்குள் கொண்டு வரப்பட்டது (D.F.Kinlaw, *Song of Songs: The Expositor's Bible Commentary Volume 5*, pp. 1205-1206).

[58] *Ibid*. p. 1206.

[59] உதாரணத்திற்கு கி.பி.3ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரிகன் என்னும் சபைப் பிதா உன்னதப்பாட்டிற்கு 10 தொகுதிகள் கொண்ட விளக்கவுரை எழுதியுள்ளார். கி.பி.12ம் நூற்றாண்டைச் சேர்ந்த பேர்னாட் என்னும் சபைப் பிதா உன்னதப்பாட்டின் முதல் 2 அதிகாரங்களிலும் 86 பிரசங்கங்கள் செய்துள்ளார்.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

கிரேக்கர்கள் மத்தியில் உருவாகி, பின்னர் யூதர்களாலும் கிறிஸ்தவர்களாலும் பின்பற்றப்பட்ட மறைபொருள் அர்த்தவிளக்கமுறை, கி.பி.16ம் நூற்றாண்டு வரை கிறிஸ்தவ சபையில் செல்வாக்கு செலுத்தியமையால், உன்னதப்பாட்டுப் புத்தகம் இயேசுகிறிஸ்துவிற்கும் சபைக்கும் இடையிலான உறவைப் பற்றிய பாடலாகவே நீண்டகாலமாக வியாக்கியானம் செய்யப்பட்டு வந்துள்ளது. சபை சீர்திருத்தத்தின் பின்னர், அதாவது, ரோம சபையின் ஆதிக்கத்திலிருந்து சபைகள் பிரிவடைந்த பின்னர்,[60] சில சபைகள் மறைபொருள் அர்த்த விளக்க முறையைப் பின்பற்றி உன்னதப்பாட்டை வியாக்கியானம் செய்து வந்தாலும், பெரும்பாலானவர்கள் இத்தகைய விளக்கமுறை பிழையானது என்பதனால், புத்தகத்தை சொல்லாத்தமாக வியாக்கியானம் செய்யத் தொடங்கினர். இது "இயற்கை அர்த்தவிளக்கம்" (natural Interpretation) என்று அழைக்கப்படுகின்றது. இதன்படி, பாடலில் உபயோகிக்கப் பட்டுள்ள உவமானங்கள் உருவக விவரணங்களாக விளக்கப்படுகையில் ஏனையவை அவற்றின் இயற்கையான அர்த்தத்தின்படி சொல்லர்த்தமாக வியாக்கியானம் செய்யப்படுகின்றது. உண்மையில் உன்னதப்பாட்டு மட்டுமல்ல வேதாகமத்தின் சகல புத்தகங்களும் இவ்விதமாகவே வியாக்கியானம் செய்யப்பட வேண்டும். வேதப் பகுதியில் உருவகங்கள், மறைபொருட்கள் இருந்தால் மட்டுமே அவற்றை சாதாரண மொழியியல் அர்த்தத்திற்கு அப்பால் உருவக விவரணத்தின்படி விளக்க முடியும். மறைபொருட்களைப் பற்றிய குறிப்புகள் எதுவும் இல்லாத வேதப் பகுதிகளை மறைபொருட்களாக விளக்குவது தவறானதும், வேதவசனங்களை தாறுமாறாக்கு வதுமான செயலாகும்.

உன்னதப்பாட்டை இயற்கையான முறையில் அர்த்தவிளக்கம் செய்வதே சரியானது என்று கூறும் போது, இப்பாடலுக்கும் தேவனுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று நாம் கருதலாகாது. பாடலில் சித்தரிக்கப்பட்டுள்ள அன்பை இயேசுகிறிஸ்து விற்கும் சபைக்கும் இடையிலான அன்பிற்கு ஒப்பிடலாம். இதுவே புதிய ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இப்பாடலை வியாக்கியானம் செய்யும் முறையாகும். புதிய ஏற்பாட்டில் சபை இயேசுகிறிஸ்துவின் மணவாட்டியாக உவமிக்கப்பட்டுள்ளது (வெளி. அதேசமயம், கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான அன்பு, இயேசுகிறிஸ்துவிற்

---

ஒரிகனைப் பொருத்தவரை, உன்னதப்பாட்டு, தேவனுக்கும் மானிட ஆத்துமாவிற்கும் இடையிலான உறவைப் பற்றிய பாடலாகும். இவர் பாடலின் 1:6ஐ விளக்கும் போது, இவ்வசனத்தில் சொல்லப்பட்டுள்ள "பெண்" புறஜாதி மக்கள் என்றும், அவளது "தாய்" பரம எருசலேம் என்றும், அவளது "சகோதரர்கள்" அப்போஸ்தலர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளதோடு, இவர்கள் புறஜாதியாராக சித்தரிக்கப்பட்டிருக்கும் பெண்ணை அவளது புறஜாதி மதத்திலிருந்து கிறிஸ்துவிடம் அழைத்துக் கொண்டு வரும் பணியை செய்வதைப் பற்றியே இவ்வசனம் கூறுகிறது என்று விளக்கியுள்ளார். சபைப் பிதா பேர்னாட் உன்னதப்பாட்டு 1:2ஐ விளக்கும் போது, இது இயேசுகிறிஸ்து மனிதராக இவ்வுலகத்திற்கு வந்ததையும், சுயகட்டுப்பாடு பொறுமை என்னும் ஆவியின் கனிகளையும், தேவனை நேசிக்கும் ஆத்துமாவின் தீவிரத்தையும், தேவன் நமக்கு கொடுக்கும் முத்தமாகப் பரிசுத்த ஆவியானவர் இருப்பதையும் குறிப்பதாக வியாக்கியானம் செய்துள்ளார் (D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, p. 355).

[60] பெந்தெகொஸ்தே நாளில் உருவான சபை, கி.பி. 313ல் கொன்ஸ்டன்டைன் என்னும் ரோம சக்கரவாத்தி கிறிஸ்தவராகும் வரை சுயாதீனமாக தனித்து செயற்பட்டு வந்தது. ஆனால் அதன் பின்னர் உலகிலிருந்த சகல சபைகளும் ரோமிலிருந்த சபையின் அதிகாரத்திற்குக் கீழாகக் கொண்டு வரப்பட்டன. அதன் பின்னர் 16ம் நூற்றாண்டு சபை சீர்த்திருத்தத்தின் பின்னர், ரோம சபையின் ஆதிக் கத்திலிருந்து பிரிவடைந்த சபைகள் புரட்டஸ்தாந்து சபைகள் என்றும், ரோம சபையின் அதிகாரத்தின் கீழ் இருந்த சபைகள் ரோமன் கத்தோலிக்க சபை என்றும் அழைக்கப்படலாயிற்று.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

கும் சபைக்கும் இடையிலான அன்பிற்கு ஒப்பிடப்பட்டுள்ளது (எபே.5:25-32). இவ்விடத்தில் நாம் கருத்திற்கொள்ளவேண்டிய முக்கியமான விடயம், தம்பதியரிடையிலான அன்பு மட்டுமே கிறிஸ்துவிற்கும் சபைக்கும் இடையிலான அன்பிற்கு ஒப்பிடப்பட்டுள்ளது என்பதாகும். எனவே, உன்னதப்பாட்டில், மணமக்களுக்கு இடையில் இருக்கும் அன்பை மட்டுமே நாம் தேவனுக்கும் மனிதருக்கும் இடையிலான அன்பிற்கு ஒப்பிட வேண்டும். பாடலின் ஒவ்வொரு வரியையும் வார்த்தையையும், கிறிஸ்துவையும் சபையையும் பற்றிய விவரணமாகக் கருத முடியாது. இத்தகைய ஒப்பிடுதல்களே மறைபொருள் அர்த்த விளக்கமாக மாறி ஒவ்வொரு வசனத்திற்கும் நூற்றுக்கணக்கான விளக்கங்களை உருவாக்கி, புத்தகத்தின் உண்மையான செய்தியை மக்களுக்கு மறைத்துவிடுகிறது.[61] உண்மையில், மானிட காதலிலும் திருமணவாழ்விலும் உள்ள உண்மையான அன்பை அறியத்தரும் உன்னதப்பாட்டு, இத்தகைய அன்பு விசுவாசிக்கும் கிறிஸ்துவிற்கும் இடையில் இருக்க வேண்டும் என்பதை சுட்டிக்காட்டுகிறது.[62]

## 2. உன்னதப்பாட்டின் கதை

உன்னதப்பாட்டு, சாலெமோனுக்கும் அவனது முதல் மனைவியான "சூலமித்தி"[63] என்னும் பெண்ணுக்கும் இடையில் ஏற்பட்ட காதலையும், அவர்களது திருமணத்தையும், வாழ்வையும் பற்றிய பாடலாகும்.[64] சாலொமோனுக்குப் பல மனைவிகள் இருந்தமையால் (1ராஜா.11:4)[65] உன்னதப்பாட்டில் சொல்லப்பட்டவிதமாக, ஒரு பெண்ணை மட்டுமே நேசிக்கும் உண்மையான அன்பை அவரால் அனுபவித்திருக்கவோ, அதைப்

---

[61] உண்மையில் மறைபொருள் அர்த்த விளக்கத்தின்படி வேதாகமத்தை வியாக்கியானம் செய்பவர்கள், வேதப்பகுதியில் சொல்லப்பட்டுள்ள விடயங்களை மக்களுக்கு அறிவிக்காமல், அதில் சொல்லப்படாத விடயங்களையெல்லாம் தங்களது கற்பனையில் உருவாக்கி மக்களைக் குழப்புகின்றனர். இதிலிருந்து மறைபொருள் அர்த்த விளக்கத்தின்படி வேதத்தை வியாக்கியானம் செய்பவர்கள் சொல்வது எல்லாமே தவறானது என்று எண்ணக்கூடாது. அவர்கள் சொல்லும் விடயங்கள் சரியானவைகளாக இருந்தாலும், அதற்காக அவர்கள் உபயோகிக்கும் வேதப்பகுதிகள் பொருத்தமற்றவைகளாக உள்ளன. அதாவது, அவர்கள் வியாக்கியானம் செய்யும் வேதப்பகுதியில் அவர்கள் சொல்லும் விடயங்கள் இல்லை.

[62] G.G.Morgan, *The Analysed Bible*, p. 197.

[63] சில வேத ஆராய்ச்சியாளர்கள் 1ராஜாக்கள் 1:3ல் தாவீதுக்கு பணிவிடை செய்வதற்காக வந்த 'சூனேம்' என்னும் ஊரைச் சேர்ந்த 'அபிஷாக்' என்பவளே உன்னதப்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் 'சூலமித்தி' என்று கருதுகின்றனர். ஆனால் ராஜாக்கள் புத்தகத்தை வாசிக்கும் போது இது தவறான ஒரு விளக்கம் என்பதை அறிந்திடலாம். "சூனேம் என்னும் ஊரை சூலமித்தி என்பதுடன் தொடர்பு படுத்துவது தவறாகும்" (R.K.Harrison, *Old Testament Introduction*, p. 1057). சூனேம் என்னும் ஊர் நாசரேத்திற்கு தென்கிழக்கில் 11 கிலோமீட்டர் தொலைவில் இருந்த பட்டணமாகும். ஆனால் சூலமித்தி லீபனோனைச் சேர்ந்தவள் (உன்னதப்பாட்டு 4:8ற்கான விளக்கத்தைப் பார்க்கவும்). மேலும், அபிஷாக் தாவீதின் அந்தப்புரத்தில் இருப்பதை 1ராஜாக்கள் 2ம் அதிகாரம் அறியத்தருகிறது. தாவீதின் நான்காவது மகனான அதோனியா (2சாமு.3:4), அபிஷாக்கைத் திருமணமுடிக்க விரும்பியமையால் (1ராஜா.2:13-21), அவள் சாலொமோனின் காதலியாக இருந்தாள் என்று கூறமுடியாது. "1ராஜாக்கள் 1:2ல் குறிப்பிடப்பட்டுள்ள விடயம், அதாவது "தாவீதிற்கு அனல் உண்டாக்கும்படி இளம் பெண்ணை அவனோடு படுக்க வைத்த முறை பழைய காலத்தில் இருந்த ஒரு மருத்துவ முறையாகும்" (D.J. Wiseman, *1 and 2 Kings: Tyndale Old Testament Commentaries*, p. 67; R.D.Patterson & H.J.Austel, *1,2Kings: The Expositor's Bible Commentary Volume 4*, p. 26). ஆனால், இக்காலத்தில் மருத்துவத்துறை வளாச்சியடைந்துள்ளமையால், கிறிஸ்தவர்கள் இத்தகைய முறையை இன்றைய காலத்திற்கு பிரயோகிப்பது தவறாகும்.

[64] F.Delitzsch, *Commentary of the Song of Songs and Ecclesiastes*, pp. 8-11. சில வேத ஆராய்ச்சியாளர்கள், சாலொமோனுக்கும் அரேபிய அரச குமாரத்திக்கும் இடையிலான காதலையும் திருமணத்தையும் பற்றிய பாடலாக உன்னதப்பாட்டைக் கருதுகின்றனர் (M.Goulder, *The Song of Fourteen Songs: Journal for the Study of the Old Testament*, pp. 11-14, 75-78). ஆனால் பாடலில் சித்தரிக்கப்பட்டுள்ள சூலமித்தி அரசகுலத்தைச் சேர்ந்தவள் அல்ல என்பதனால் இக்கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

[65] 1ராஜாக்கள் 11:3ன்படி அவருக்கு பிரபுக்கள் குலமான 700 மனைவிகளும், 300 மறுமனையாட்டிகளும் இருந்துள்ளனர்.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

பற்றி எழுதியிருக்கவோ முடியாது என்று சிலர் கருதுகின்றனர். இதனால், இவர்கள் சாலொமோனைப் பாடலின் வில்லனாக மாற்றியுள்ளனர்.[66] இவர்களது கருத்தின்படி, சூலமித்தி ஏற்கனவே ஒரு ஏழை மேய்ப்பனைக் காதலித்து வந்தாள். சாலொமோன் இவளைத் தனது மனைவியாக்கிக் கொள்வதற்காகத் தனது அரன்மனைக்கு அழைத்துக் கொண்டு வந்து, தனது செல்வத்தையும், சௌகரியமான வாழ்வையும் காண்பித்து, தனது காதல் வார்த்தைகளினால், அவளது மனதைக் கவர முயற்சி செய்கின்றான். ஆனால் அவனது முயற்சி வெற்றியளிக்கவில்லை. கடைசியில் சூலமித்தி தனது காதலனிடமே சென்று விடுகிறாள்.[67] இதன் மூலம் உண்மையான அன்பை எதனாலும் அழிக்கமுடியாது என்னும் சத்தியம் உன்னதப்பாட்டில் சுட்டிக்காட் டப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்றது.[68]

உன்னதப்பாட்டு சாலொமோன் எழுதிய பாடலாக இருப்பதனால்,[69] அவர் தன்னை வில்லனாகக் காண்பிக்கும் விதத்தில் இப்புத்தகத்தை எழுதினார் என்று கூறுவது அர்த்தமற்றது. புத்தகத்தின் தலைப்பு, இதுவே சலொமோன் எழுதிய பாடல்களில் சிறந்தது (உன்னதமானது) என்பதை அறியத்தருகின்றது.[70] எனவே, சாலொமோன் தான் எழுதிய சிறந்த பாடலில் தன்னை வில்லனாகச் சித்தரித்துள்ளார் என்று கூறமுடியாது. மேலும், உன்னதப்பாட்டில் மூன்று பிரதான கதாபாத்திரங்கள் இருப்பதாகக் கூறுவது பலவந்தமாக ஒருவரை பாடலுக்குள் திணிப்பதாகவே உள்ளது. உதாரணத்திற்கு உன்னதப்பாட்டு 7:10ல், சாலொமோன் பேசி முடித்த பின்னர் சூலமித்தி பேசும் போது (உன்.7:10-8:4ல்) அவள் தன் காதலனான மேய்ப்பனிடம் பேசுவதாகக் கூறுவது, இவ்விடத்தில் இல்லாத ஒரு மேய்ப்பனை இருப்பதாகக் கற்பனை செய்யும் விளக்கமா

---

[66] C.H.Bullock, *An Introduction to the Old Testament Poetic Books*, pp. 232-254.

[67] இத்தகைய வியாக்கியான முறை “மூன்று நபர் நாடக விளக்கமுறை” (Three Character Dramatic Interpretation) என்று அழைக்கப்படுகிறது.

[68] கி.பி.12ம் நூற்றாண்டைச் சேர்ந்த யூதமதப் போதகரான Ibn Ezra என்பாரினால் முன்வைக்கப்பட்ட இக்கருத்து, கி.பி. 1772ல் J.F.Jacobi என்பாரினால் விரிவுபடுத்தப்பட்டது (R.E.Murphy, *The Song of Songs*, pp. 38). அதன் பின்னர் யூத மதப் பண்டிதர்களான லோவிஸ்ஹொன் (Lowisohn 1816ல்) மற்றும் இவால்ட் (Ewald 1826ல்) என்போரினால் மேலதிகமாக விரிவுபடுத்தப்பட்டது. (R.K.Harrison, *Old Testament Introduction*, p. 1054). கி.பி.1771ல் கிறிஸ்தவ வேத ஆராய்ச்சியாளரான Jacobi என்பர் இவ்விளக்கத்தை ஏற்றுக்கொண்டார். பிற்காலத்தில் S.R.Driver என்பார் இவ்விளக்கத்தை கிறிஸ்தவர்கள் மத்தியிலும் பிரப லமடையச் செய்தார் (S.C.Glickman, *A Song for Lovers*, p. 178).

[69] எபிரேய மொழியில் எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டில், புத்தகத்தின் ஆரம்ப வார்த்தை அல்லது வசனமே புத்தகத்தின் தலைப்பாக இருந்தது. உன்னதப்பாட்டின் முதல் வசனம் இது “சாலொமோன் பாடின உன்னதப்பாட்டு” என்பதை அறியத்தருகின்றது. சாலெமோன் இப்புத்தகத்தை எழுதியதை மறுதலிக்கும் வேத ஆராய்ச்சியாளர்கள், “சாலொமோன் பாடின” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்பிரயோகம், “சாலொமோனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட” என்று அல்லது, சாலொமோனின் மொழி நடையில்” (R.K.Harrison, *Old Testament Introduction*, p. 1049; W.S.Lasor, D.A.Hubbard & F.W.Bush, *Old Testament Survey*, p, 601) என்று மொழிபெயர்க்க வேண்டும் என்று கூறுகின்றனர். ஆனால் இத்தகைய மொழிபெயர்ப்புகள் ஏற்றுக்கொள்ளக்கூடியவைகள் அல்ல. மூலமொழியில் இச்சொற்பிரயோகம் சாலொ மோன் இப்புத்தகத்தின் எழுத்தாளர் என்பதையே சுட்டிக்காட்டுகிறது (R.E.Murphy, *The Song of Songs*, p. 119).

[70] மூலமொழிப்பதம் இதுவே சாலொமோனின் சிறந்த பாடல் என்பதை அறியத்தருகிறது. சாலொமோன் மொத்தம் 1005 பாடல்களை எழுதியுள்ளார் இவற்றில் உன்னதப்பாட்டே சிறந்தது. ஆங்கிலத்தில் இப்புத்தகத்திற்கு மூன்று பெயர்கள் உள்ளன. இப்புத்தகம் சாலொமோனினால் எழுதப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ளும் வேதஆராய்ச்சியாளர்கள் பொதுவாக இப்பத்தகத்தை “சாலொமோனின் பாடல்” என்னும் அர்த்தத்தில் *The Song of Solomon* என்று குறிப்பிடுகின்றனர். ஏனையவர்கள் பாடல்களிலேயே சிறந்த பாடல் என்னும் அர்த்தத்தில் *The Song of Songs* என்னும் பெயரால் இப்புத்தகத்தை அழைக்கின் றனர். மேலும் லத்தீன் மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டு சிலர் *The Canticles* என்று இப் புத்தகத்தைக் குறிப்பிட்டுள்ளனர்.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

கவே உள்ளது. “10ம் வசனத்துடன் சாலொமோன் சூலமித்தியைவிட்டுப் போய்விட்டான் இதனால் அதற்குப் பின்னுள்ள வசனங்களில் அவள் தனிமையில் தன் காதலனுடன் பேசுகிறாள்”[71] என்று இவர்கள் கூறுவது பாடலில் இல்லாத ஒரு கதாபாத்திரத்தை பாடலுக்குள் புகுத்துவதாகவே உள்ளது. பாடலில் மூன்று பிரதான கதாபாத்திரங்கள் இருப்பதாகக் கூறுபவர்கள் இவ்விதம் பல இடங்களில் பாடலில் இல்லாத ஒரு மேய்ப்பனைப் பாடலுக்குள் கொண்டுவந்துள்ளனர். ஆனால் “உன்னதப்பாட்டு இருவர் சம்பந்தப்பட்ட பாடலாக, இருவரும் ஒருவரோடொருவர் பேசும் விதத்திலேயே எழுதப் பட்டுள்ளது.[72]

சூலமித்தியின் வார்த்தைகள் அவளுடைய காதலான மேய்ப்பனுடன் அவள் பேசுபவை என்று கூறுபவர்கள் உன்னதப்பாட்டு 1:7ஐ தங்களது விளக்கத்திற்கான முக்கிய ஆதாரமாகக் கருதுகின்றனர்.[73] இவ்வசனத்தில் சூலமித்தி, “என் ஆத்தும நேசரே, உமது மந்தையை எங்கே மேய்த்து, அதை மத்தியானத்தில் எங்கே மடக்குகிறீர்? எனக்குச் சொல்லும். உமது தோழரின் மந்தைகள் அருகே அலைந்து திரிகிறவளைப் போல நான் இருக்கவேண்டியது என்ன?” என்று கேட்கிறாள். ஆனால் சாலொமோன் ஒரு சாதாரண மேய்ப்பனைப் போலவே சூலமித்தி வாழும் பிரதேசத்திற்குச் சென்றமை யால்[74] அவனை ஆரம்பத்தில் ஒரு சாதாரண மேய்ப்பனாகக் கருதியே சூலமித்தி அவனுடன் பழகத் தொடங்கினாள். இதனாலேயே இவ்வசனத்தில் அவனை மேய்ப்பன் என்று அழைத்தள்ளாள்.[75]

சூலமித்தியின் காதலன் ஏழை மேய்ப்பன் என்று கூறுபவ்கள் சாலொமோன் சூலமித்தியைப் பலவந்தாகத் தன் அரன்மனைக்குக் கொண்டு வந்ததைப் பற்றியே உன்னதப்பாட்டு 1:4ல் “ராஜா என்னைத் தமது அறைகளில் அழைத்துக் கொண்டு வந்தார்” என்று அவள் குறிப்பிட்டுள்ளதாக விளக்குகின்றனர்.[76] ஆனால் சூலமித்தி

---

[71] C.H.Bullock, *An Introduction to the Old Testament Poetical Books*, p. 252.
[72] J.A.Balchin, *The Song of Somgs: The New Bible Commentary 21st Century Edition*, p. 619.
[73] S.R.Driver, *An Introduction to the Literature of the Old Testament*, p. 417; F.Godet, “The Interpretation of the Song of Songs” in *Classical Evangelical Essays in Olt Testament Interpretation*, p. 152.
[74] இது பற்றிய விளக்கம், உன்னதப்பாட்டின் பின்னணிக்கதை பற்றி இக்கட்டுரையில் குறிப்பிடப்பட் டிருக்கும் பந்தியில் உள்ளது.
[75] சாலொமோன் இளவயதுடையவனாய் இருக்கும் போது, தனக்கு சூலமித்தியுடன் ஏற்பட்ட காதலையே உன்னதப்பாட்டில் எழுதியுள்ளார் என்பதற்கு எதிராக சுட்டிக்காட்டப்படும் வசனம் உன்னதப்பாட்டு 6:8ஆகும். இவ்வசனத்தில் சாலொமோன் “ராஜஸ்திரீகள் அறுபது பேரும் மறுமனையாட்டிகள் எண்பது பேருமுண்டு. கன்னியருக்குத் தொகையில்லை” என்று குறிப்பிட்டுள்ளான். சாலொமோன் பிற்காலத்தில் பல பெண்களுடன் தொடர்பு வைத்திருந்தமையால் ஒரு பெண்ணை மட்டுமே நேசிக்கும் உன்னதப் பாட்டின் கதாநாயகனாக அவரைக் கருதமுடியாது என்பதும் சூலமித்தியின் காதலன் சாதாரண ஏழை மேய்ப்பன் என்று கூறுபவர்களின் தர்க்கமாக உள்ளது (S.R.Driver, *An Introduction to the Literature of the Old Testament*, p. 417). ஆனால் சாலொமோன் இவ்வசனத்தில் அரண்மனையின் அந்தப்புரத்தில் இருக்கும் பெண்களையே குறிப்பிட்டுள்ளான் (D.F.Kinlaw, *Song of Songs: The Expositor’s Bible Commentary Volume 5*, p. 1235). எனினும், அடுத்த வசனத்தில் அரன்மனையில் இத்தனைப் பெண்கள் இருந்தாலும், தான் சூலமித்தியை மட்டுமே நேசிப்பதாகச் சாலொமோன் குறிப்பிட்டுள்ளார் (உன்.6:8). எனவே, சாலொமோன், வேறு பெண்களை நாடிச் செல்வதற்கும் முன்னர் தனக்கு சூலமித்தியுடன் ஏற்பட்ட காதலையே உன்னதப்பாட்டில் சித்தரித்துள்ளார் என்பது தெளிவாகின்றது. உண்மையில், “சூலமித்தி எவ்வளவு சிறப்பானவள் என்பதை அறியத்தருவதற்காகவே அவளை மற்ற பெண்களுடன் ஒப்பிட்டுக் காண்பிப்பதற்காக அந்தப்புரத்தில் இருந்த பெண்கள் இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனர்” (D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, p. 417).
[76] R.Gordis, *The Song of Songs and Lamentations*, p. 78


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

இவ்வசனத்தில் தன் காதலனையே ராஜா என்று குறிப்பிட்டுள்ளாள்.[77] மேலும், இவ்வாக்கியம் மூலமொழியில் சூலமித்தி தனது ஆசையை வெளிப்படுத்தும் விதத்தில் “ராஜா என்னைத் தமது அறைகளுக்கு அழைத்துக் கொண்டு வரட்டும்” என்றே உள்ளது.[78] எனவே இதை சாலொமோன் பலவந்தமாகச் செய்த செயலாக விளக்க முடியாது. மேலும், சூலமித்தியில் சில வார்த்தைகள் ஒரு சாதாரண மேய்ப்பனுக்குப் பொருத்தமற்றவைகளாகவே உள்ளன. உதாரணத்திற்கு உன்னதப்பாட்டு 6:2ல் சூலமித்தியின் காதலன் “தோட்டங்களில் மேயவும், லீலி புஷ்பங்களைக் கொய்யவும், தமது தோட்டத்திற்கும் கந்தவர்க்கப் பாத்திக்கும் சென்றுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள் ளது. உண்மையில் ‘தமது தோட்டம்’ ‘கந்தவர்க்கப் பாத்தி’ என்பன ஒரு சாதாரண மேய்ப்பனுக்கு இருப்பதாகக் கூறமுடியாது. “அக்காலத்தில் சாதாரண மேய்ப்பர்கள் வறியவர்களாக இருந்தமையால், அவர்கள் வாசனைத் திரவியங்களும் அழகிய மலர்களும் உள்ள நந்தவனங்களின் சொந்தக்காரர்களாக இருக்கவில்லை.”[79] சாலொ மோனிடமே இத்தகைய தோட்டங்கள் இருந்தன (பிர.2:5). எனவே, சூலமித்தி தன் ஏழைக்காதலனான மேய்ப்பனைப் பற்றியே காதல் மொழிகளில் பேசுகிறாள் என்னும் விளக்கம் ஆதாரமற்றதாகவே உள்ளது.

உன்னதப்பாட்டு, சாலொமோனுக்கும் சூலமித்திக்கும் இடையில் ஏற்பட்ட காதலையும், அவர்களுடைய திருமணவாழ்வையும் பற்றிய அருமையான ஒரு காவியமாக உள்ளது. எனினும் சில வேத ஆராய்ச்சியாளர்கள், முழுப் புத்தகத்திலும், தொடர்ச்சியான ஒரு வரலாற்றுக் கதை இருப்பதை ஏற்றுக்கொள்ளாமல், உன்னதப்பாட்டு பல பாடல்களின் தொகுப்பு என்று கூறுகின்றனர். பலரது பாடல்கள் இப்புத்தகத்தில் இருப்பதாக இவர்கள் கருதுகின்றனர்.[80] இதனால் இவர்கள் உன்னதப்பாட்டில் சித்தரிக்கப்பட்டுள்ள கவிதைக் காட்சிகளைச் சரித்திர ரீதியானவையாக ஏற்றுக் கொள்வதில்லை.[81] எனினும், உன்னதப்பாட்டைப் பல பாடல்களின் தொகுப்பு என்று கூறுபவர்கள் தங்களுக்கிடையி லேயே “ஒரு பாடல் எவ்வசனத்தில் ஆரம்பித்து எவ்வசனத்தில் முடிவடைகின்றது என்பது பற்றி கருத்து முரண்பாடுடையவர்களாக இருக்கின்றனர்.”[82] முழுப் புத்தகத்தை யும் கிரமமான முறையில் வாசிக்கும் போது ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை ஒரு தொடர்பு இருப்பதையும், ஒவ்வொரு அத்தியாயமும் அதற்கு முன் உள்ள அத்தியாயத் தின் தொடர்ச்சியாய் இருப்பதையும் நாம் அறிந்திடலாம்.[83] எனவே இதைப் பல பாடல்களின் தொகுப்பு என்று கூறமுடியாது. மேலும் உன்னதப்பாட்டின் கதையில்

---

[77] D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Solomon: The New American Commentary*, p. 385.
[78] திருவிவிலியத்தில் இவ்வசனம் “அரசர் என்னைத் தம் அறைக்குள் அழைத்துச் செல்லட்டும்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. புதிய இலகு தமிழ் மொழிபெயர்ப்பும் NIV ஆங்கில வேதாகமத்தை அடிப்ப டையாகக் கொண்டு, “அரசன் தமது அறைக்குள் என்னைக் கொண்டு வரட்டும்” என்று குறிப்பிட்டுள்ளது.
[79] G.L.Archer, *A Survey of Old Testament Introduction*, p. 542.
[80] A.Bloch & C.Bloch, *The Song of Songs: A New Translation with an Introduction and Commentarty*, pp. 18-20.
[81] சாலொமோனின் பெயர் புத்தகத்தில் “கவிதைக் கதாபாத்திரமாக” இருக்கின்றது என்பதே இவர்களது தார்க்கமாகும். இதனால் இவர்கள் உன்னதப்பாட்டு சாலொமோனினால் எழுதப்பட்டது என்பதையும் ஏற்றுக்கொள்வதில்லை (D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, p. 365). ஆனால் புத்தகத்தின் ஆரம்பவரிகள் சாலொமோனே உன்னதப்பாட்டை எழுதியவர் என்பதை அறியத்தருகின்றது.
[82] M.Falk, *The Song of Songs: A New Translation and Commentary*, p. xiii.
[83] J.A.Balchin, *The Song of Songs: The New Bible Commentary 21st Century Edition*, p. 619.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

மூன்று நபர்கள் மட்டுமே உள்ளனர். ஒன்று பாடலின் நாயகன் சாலொமோன், இரண்டு அவனது காதலி சூலமித்தி. மூன்று எருசலேம் நகரப் பெண்கள்.[84] மேய்ப்பன் என்று இன்னுமொரு பிரதான பாத்திரம் இருக்கின்றது என்பதற்குப் பாடலில் எவ்வித ஆதாரமும் இல்லை.

உன்னதப்பாட்டின் பின்னணியில் அருமையான ஒரு காதல் கதை உள்ளது. எருசலேம் நகரத்திற்கு 50 மைல்கள் வடக்கே 'பாகால் ஆமோன்'[85] என்னுமிடத்தில் சாலொமோனுக்கு சொந்தமாக ஒரு திராட்சைத் தோட்டம் இருந்தது. இதை அவர் குத்தகைக்கு விட்டிருந்தார் (உன்.8:11).[86] குத்தகைக்கு இத்தோட்டத்தை எடுத்தவர்களே உன்னதப் பாட்டு 8:11ல் 'காவலாளிகள்' என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு தாயும் அவளது இரண்டு ஆண்பிள்ளைகளும், இரு பெண்பிள்ளைகளும் உள்ளனர். பெண்பிள்ளைகளில் ஒருத்தி சூலமித்தி[87] மற்றவள் உன்னதப்பாட்டு 8:8ல் குறிப்பிடப் பட்டிருக்கும் அவளது சிறிய சகோதரி. சூலமித்தியின் தகப்பனைப் பற்றிய குறிப்புகள் எதுவும் இப்பாடலில் இல்லாதமையால் அவன் ஏற்கனவே மரித்திருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது.[88] சூலமித்தி சகோதரர்களைத் தன் 'தாயின் பிள்ளைகள்' என்று குறிப்பிடுவதனால் (உன்.1:6), இவர்கள் அவளது தாய்க்கு வேறொரு மனிதன் மூலமாகப் பிறந்தவர்களாகவே இருக்க வேண்டும். இதனாலேயே அவர்கள் சூலமித்தியைத் தோட்டத்திற்கு காவலாளியாக வைத்துள்ளனர் (உன்.1:6). ஒரு நாள் சாலோமோன் "மேய்ப்பனைப் போல வேடமிட்டு, தனது திராட்சைத் தோட்டத்திற்குச் சென்றான். சூலமித்தி அவனை ஒரு மேய்ப்பனாகவே கருதி அவன் மந்தைகளை

---

[84] எருசலேம் நகரப் பெண்கள் பாடலில் "எருசலேம் குமாரத்திகள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்கள் பாடலில் 1:5, 2:7, 3:5, 3:10, 5:8, 8:4 போன்ற வசனங்களில் இடம்பெறுகின்றனர். இவர்கள் ஒன்றில் ஒரு கோரிக்கையை விடுபவர்களாக அல்லது அறிவுறுத்தலைக் கொடுப்பவர்களாகவே பாடலில் உள்ளனர். எனினும், இவர்கள் எப்பொழுதும் சூலமித்தியுடன் பேசுபவர்களாகவே சித்தரிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் எருசலேம் நகரத்துப் பெண்களைப் பிரதிநிதித்துவம் வகிப்பவர்களாக உள்ளனர் (G.L.Carr, *The Song of Solomon: Tyndale Old Testament Commentaries*, pp. 77-78). இவர்கள் சூலமித்தியின் தோழிகளாக இருப்பதாக NIV ஆங்கில மொழிபெயர்ப்பு குறிப்பிட்டுள்ளமையால் புதிய இலகுதமிழ் மொழிபெயர்ப்பில் இவர்கள் தோழியர் என்றே குறிப்பிடப்பட்டுள்ளனர். சில வேத ஆராய்ச்சியாளர்கள் இதுவே சரியான விளக்கம் என்று கருதுகின்றனர் (D.F.Kinlaw, *Song of Songs: The Expositor's Bible Commentary Volume 5*, p. 1217).

[85] இரு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட புத்தகங்களில் ஒன்றான ஜூடித் என்னும் புத்தகத்தில் அவளது கணவன் மனாசே என்பவன் அடக்கம்பண்ணப்பட்ட ஊரே 'பாகால் ஆமோன்' என்று இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இவ்வூர் பற்றி ஜூடித் 8:3ஐத் தவிர வேறு புத்தகங்களில் குறிப்பிடப்படவில்லை (G.L.Carr, *The Song of Solomon: Tyndale Old Testament Commentaries*, p. 174).

[86] உன்னதப்பாட்டு 8:11ல் "பாகால் ஆமோனிலே சாலொமோனுக்கு ஒரு திராட்சைத் தோட்டம் உண்டாயிருந்தது. அந்தத் தோட்டத்தைக் காவலாளிகள் வசத்திலே அதின் பலனுக்காக, ஒவ்வொருவன் ஆயிரம் வெள்ளிக்காசு கொண்டுவரும்படி விட்டார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சில வேத ஆராய்ச்சியாளர்கள் இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் 'ஆயிரம் வெள்ளிக்காசை' சாலொமோனின் '700 மனைவிகளும் 300 மறுமனையாட்டிகளும்' (1ராஜா.11:3) என்று விளக்கியுள்ளனர். ஆனால், தோட்டத்தில் கிடைக்கும் பலனில் 200 வெள்ளிக்காசு அதைக் காவல் பண்ணுகிறவர்களுக்கு உரியது என்று அடுத்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதினால் இவ்விளக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. இதனால் சிலர், சாலோமோனைக் கேலி செய்யும் விதத்திலேயே இவ்வசனம் உள்ளதாகக் கூறுகின்றனர். அதாவது சாலொமோனுக்கு ஆயிரம் மனைவியர் இருந்தாலும் எல்லோரையும் அவரால் தன்னிடத்தில் வைத்திருக்க முடியவில்லை. சிலர் காவலாளிகளிடம் சென்றுவிட்டனர் என்று கூறுகின்றனர் (R.E.Murphy, *The Song of Songs*, p. 200; M.V.Fox, *The Song of Songs and the Ancient Egyptian Love Songs*, 175). ஆனால் இது அர்த்தமற்ற ஒரு விளக்கமாகவே உள்ளது. மேலும் சூலமித்தி சாலொமோனுடைய முதல் மனைவியாக இருப்பதனால், உன்னதப்பாட்டு 8:11-12ஐ இவ்விதம் விளக்க முடியாது.

[87] சூலமித்தியின் பெயர் உன்னதப்பாட்டு 6:13ல் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

[88] G.L.Carr, *The Song of Solomon: Tyndale Old Testament Commentaries*, p. 79.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

இளைப்பாற வைக்கும் இடம் பற்றி கேட்டாள் (உன்.1:7).”[89] சாலோமோனோ தனது மந்தைகளின் காலடிகளைத் தொடர்ந்து வரும்படி கூறினான். (உன்.1:8). இச்சந்திப்பு இறுதியில் காதலாக மலர்ந்தது. சூலமித்தி தனது சரீர அழகைப் பற்றி வருத்தப்பட்டாலும் (உன்.1:6) சாலொமோன் அவளது அழகைப் புகழ்வதோடு (உன்.1:9-10) அவளுக்கு ஆபரணங்களைச் செய்து கொடுப்பதாகவும் வாக்களித்தான் (உன். 1:11). இவர்களது காதல் வளர்ந்திட, தான் ஒரு நாள் மணக்கோலத்தில் வந்து அவளைத் தன்னோடு அழைத்துச் செல்வதாகவும் உறுதியளித்துச் சென்றதோடு, பின்னர் மணக்கோலத்தில் வந்து அவளைத் தன் அரன்மனைக்கு அழைத்துச் சென்றான் (3:6-7).[90] உன்னதப்பாட்டின் பின்னணியில் இருக்கும் இக்கதை சரித்திர ரீதியானது என்பதை நாம் மறக்கலாகாது.

## 3. உன்னதப்பாட்டின் காட்சிகள்

உன்னதப்பாட்டு சாலோமோனுக்கும் சூலமித்திக்கும் இடையில் ஏற்பட்ட காதலையும் அவர்களது திருமணவாழ்வையும் சித்தரிக்கின்ற பாடலாக இருப்பதனால் இது கிரமமான முறையில் எழுதப்பட்டுள்ள ஒரு காவியமாக உள்ளது. இதில் மூன்று பிரதான பகுதிகள் உள்ளன. பாடலின் முதற்பகுதி அதாவது 1:1 முதல் 3:5 வரை திருமணத்திற்கு முன்னான காதல் வாழ்வு பற்றிய விவரணமாய் உள்ளது. 3:6 முதல் 5:1 வரையிலான இரண்டாவது பகுதி திருமண நாளின் சம்பவங்களைக் கொண்டுள்ளது. பாடலின் மூன்றாவது பகுதி, அதாவது 5:2-8:4 வரையிலான வசனங்கள் திருமணத்தின் பின்பான வாழ்வைப் பற்றிய விவரணமாய் உள்ளது. முதற் பகுதியை மற்றைய இரு பகுதிகளுடனும் ஒப்பிடும் போது, ஒருசில வித்தியாசங்களை நாம் அவதானிக்கலாம். முதல் பகுதியில் காதலர்கள் தங்களது பாலியல் ஆசைகளை வெளிப்படுத்தியுள்ள போதிலும் இருவரும் கட்டப்பாட்டுடன் நடந்து கொண்டுள்ளதை நாம் அவதானிக்கலாம். ஆனால், இரண்டாம் மூன்றாம் பகுதிகளில் இத்தகைய கட்டுப்பாட்டை நாம் காண்பதில்லை. இதிலிருந்து முதல் பகுதி திருமணத்திற்கு முன்பான காதல் வாழ்வைப் பற்றிய விவரணம் என்பது தெளிவாகின்றது.[91]

சாலொமோனும் சூலமித்தியும் தங்கள் காதல் வாழ்வில் பாலுறவிற்கு இடமளிக்காமல், தங்கள் ஆசைகளைக் கட்டுப்படுத்தி வாழ்ந்தது போல இன்றைய வாலிபர்களும் இருக்கவேண்டும் என்பதைத் தேவன் இப்பாடல் மூலம் அறியத்தருகின்றார். பாடலின் முதற்பகுதியில் இருதடவைகள் இவ்விடயம் சூலமித்தியின் வார்த்தைகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உன்னதப்பாட்டு 2:7லும், 3:5லும், சூலமித்தி எருசலேம் குமாரத்திகளிடம், “எனக்கு பிரியமானவளுக்கு மனதாகுமட்டும் நீங்கள் அவளை விழிக்கப்பண்ணாமலும், எழுப்பாமலுமிருக்கும்படி, வெளிமான்கள் மேலும் வெளியின்

[89] S.Olyott, *A Life Worth Living and A Lord Worth Loving*, p. 75.
[90] H.A.Ironside, *Addresses on the Song of Solomon*, pp. 17-21; M.Unger, *Bible Handbook*, pp. 299-300.
[91] J.S.Deere, *Song of Songs: The Bible Knowledge Commentary Old Testament*, p. 1021.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

மரைகள் மேலும் உங்களை ஆணையிடுகிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.[92] எனினும் மூலமொழியில் இவ்வசனம், "காதல் விரும்பப்படக்கூடிய காலம் வரும் வரை அதைத் தூண்டவோ, எழுப்பவோ வேண்டாம்'' என்றே உள்ளது. இதனால் புதிய இலகு தமிழ் மொழிபெயர்ப்பில் "காதலை அதற்குரிய நேரம் வரும்வரை தூண்டவேண்டாம்'' என்று மொழிபெயர்த்துள்ளார்கள்.[93] உண்மையில் இவ்வசனங்களில் காதல் என்பது மூலமொழியில் பாலியலையே குறிக்கின்றது. எனவே, பாலுறவுக்கான உரிய காலம் வரும்வரை அதைத் தூண்டவோ எழுப்பிவிடவோ வேண்டாம் என்றே இவ்வசனங்களில் சொல்லப்பட்டுள்ளது.[94] உண்மையில் தேவ நியமத்தின்படி பாலுறவிற்கு உரிய காலம் திருமணமாகும். எனவே திருமணம் வரை பாலுறவைத் தூண்டவேண்டாம் என்னும் அறிவுறுத்தல் இப்பாடலில் மனுக்குலத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது.

## (அ). திருமணத்திற்கு முன்பான காதல்வாழ்வு (உன்.1:2-3:5)

உன்னதப்பாட்டின் முதற்பகுதியில் முதலாம் அதிகாரம் முதல் 11 வசனங்களிலும் சாலொமோனும் சூலமித்தியும் தங்கள் மன உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளாள். சாலொமோனின் மீது ஏற்பட்ட காதல் திராட்சைரசத்தை விட மேலானது என்று சூலமித்தி அறியத்தருகின்றாள் (1:2).[95] திராட்சைரசம் நாவிற்கு சுவையானது.

---

[92] இவ்விடயம் ஏன் "வெளிமான்கள் மேலும் வெளியின் மறைகளின் மேலும் ஆணையிட்டு'' சொல்லப்பட்டுள்ளது என்பது பற்றி வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் கருத்துமுரண்பாடுகள் உள்ளன. சிலர் தேவனுடைய பெயரே இவ்வாறு மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கருதுகின்றனர் (M.V. Fox, *The Song of Songs and the Ancient Egyptian Love Songs*, p. 110). ஆனால் தேவனுடைய பெயரில் இத்தகைய ஒரு ஆணையிடப்படுவதாக இவ்வசனத்தைக் கருத முடியாது. மேலும், தேவனை இவ்வாறு மிருகமாக உருவகிக்க வேண்டிய அவசியமும் இல்லை. "9ம் வசனத்தில் சூலமித்தி சாலொமோனை ஆண் மானுக்கு ஒப்பிடுவதனால் (மூலமொழியில் வெளிமான் ஆண்பாலிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது) இவ்வசனத்தில் அவள் தன்னையே பெண்மானாக ஒப்பிட்டிருக்க வேண்டும்'' (D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, p. 392). எனவே இது அவள் தன்மீதே ஆணையிட்டுக் கொள்ளும் வாக்கியமாகவே உள்ளது. உன்னதப்பாட்டை அக்கால புறமதவழிபாட்டுச் சடங்காச்சாரங்களோடு தொடர்புடைய பாடல் என்று கூறுபவர்கள் அவ்வழிபாட்டில் பாலியலை அடிப்படையாகக் கொண்ட மந்திரச் செயலில் உபயோகிக்கப்படும் மிருகங்களைப் பற்றிய குறிப்பாக இதனைக் கருதுகின்றனர் (M.H.Pope, *Song of Songs: Anchor Bible Commentary*, p. 386). ஆனால், இத்தகைய மந்திரச் சடங்குகளில் ஆண் மிருகமே உபயோகிக் கப்படும். உன்னதப்பாட்டில் குறிப்பிடப்பட்டிருப்பவை (மூலமொழியின்படி) பெண் மிருகங்கள் என்பதனாலும், இது புறமதவழிபாட்டோடு சம்பந்தப்பட்ட பாடல் இல்லை என்பதனாலும் இவ்விளக்கத்தை ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

[93] எனினும், இம்மொழிபெயர்ப்பில் இதை சாலொமோனின் கூற்றாகக் குறிப்பிட்டிருப்பது தவறாகும். உண்மையில் 2ம் அதிகாரத்தில் 3 முதல் 13 வரையிலான வசனங்கள் சூலமித்தியின் கூற்றாகவே உள்ளது (NIV ஆங்கில மொழிபெயர்ப்பைப் பாக்கவும்). திருவிவிலியத்தில் இவ்வசனம் "காதலை தட்டி எழுப்பாதீர். தானே விரும்பும் வரை அதைத் தட்டி எழுப்பாதீர்'' என்று குறிப்படப்பட்டுள்ளது. நாம் உபயோகிக்கும் வேதாகமத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு ஆங்கிலத்தில் வெளிவந்த ஜேம்ஸ் அரசனின் மொழிபெயர்பபை அடிப்படையாகக் கொண்டது. அப்படியிருந்தும் அம்மொழிபெயர்ப்பில் "அவனுக்கு மனதாகுமட்டும் என்னுடைய அன்பைத் தூண்ட வேண்டாம்'' என்று இருப்பதை தமிழில் "எனக்கு பிரியமானவளுக்கு மனதாகுமட்டும் நீங்கள் அவளை விழிக்கப்பண்ணாமலும் எழுப்பாமலும் இருக்கும்படி'' என்று குறிப்பிட்டுள்ளனர். ஜேம்ஸ் அரசனின் மொழிபெயர்ப்பில் "I charge you, O ye daughters of Jerusalem, by the rose, and by the hinds of the field, that ye stir not up, nor awake my love, till he please'' என்றே இவ்வசனம் உள்ளது. NIV மொழிபெயர்ப்பில் "Do not arouse or awaken love until it so desires'' மூலமொழிக்கு ஏற்ற விதத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

[94] D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, pp. 392-393. "சாலொமோனும் சூலமித்தியும் தனியாக இருக்கட்டும். எருசலேம் குமாரத்திகள் அவர்களை எழுப்பிவிட வேண்டாம் என்றே இவ்வசனத்தில் சொல்லப்பட்டுள்ளது'' (M.V.Fox, *The Song of Songs and the Ancient Egyptian Love Songs*, p. 110) என்னும் விளக்கமும், "சூலமித்தி தனது காதலனைப் பற்றி கனவு காணட்டும் அவளை எழுப்ப வேண்டாம்'' (F.Delitzsch, *Song of Songs*, pp. 46-47) என்னும் விளக்கமும் இவ் வசனத்திற்கு எவ்விதத்திலும் பொருத்தமற்றதாகவே உள்ளது.

[95] உன்னதப்பாட்டு 1:2ல் 'நேசம்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள பதத்தைச் சில வேத ஆராய்ச்சியாளர்கள் 'அரவணைப்பு' அல்லது 'தழுவுதல்' என்றே மொழிபெயர்க்க வேண்டும் என்று கூறுகின்றனர். சிலர் இதை பாலுறவாக மொழிபெயர்த்துள்ளனர் (D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song*


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

சரீரத்திற்கு போதை தருவது. இதைவிட சாலொமோனின் மீது தான் கொண்ட காதல் இன்பமாய் இருப்பதாக சூலமித்தி கூறுகிறாள். “வேதாகம காலத்தில் முத்தம் ஆழ்ந்த அன்பின் வெளிப்பாடாக இருந்தது. இது வெறும் காதல் மயக்கத்தின் ஆசையாக இருக்கவில்லை.”[96] முத்தத்தை எதிர்பார்க்கும் சூலமித்தியின் மனநிலை இதுவாகும். மூலமொழியில் 3ம் வசனத்தின் ஆரம்ப வரியும் 2ம் வசனத்தின் தொடர்ச்சியாகவே உள்ளது. எனவே, சாலொமோனின் மீதான காதல் சுகந்த வாசனையையும்விட அதிக இன்பத்தைத் தருவதாக சூலமித்தி குறிப்பிட்டுள்ளாள். உண்மையில் இன்பம் தருவதற்காக உலகில் இருக்கும் அனைத்தையும்விட சாலோமோன் அதிக சந்தோஷத்தை அவளுக்குக் கொடுத்தான். இதேவிதமாக, நமக்கும் தேவன் நமது வாழ்க்கைத் துணையாக தந்துள்ள நபர் மட்டுமே உலகில் இருக்கும் அனைத்தையும் விட சிறந்ததாகவும், முழுமையான சந்தோஷத்தைத் தருபவராகவும் இருக்கவேண்டும். ஆவிக்குரிய வாழ்வில் இயேசுகிறிஸ்து இப்படிப்பட்டவராக இருக்கின்றார்.

எபிரேய மொழிவழக்கில் நாமம் ஆள்தத்துவத்தை, அல்லது முழு மனிதனையும் குறிக்கும் விவரணமாகும். சகல பெண்களும் விரும்பக்கூடிய விதத்தில் அவன் இருந்தான் (1:3). 4ம் வசனத்தில் உள்ள கூற்றுக்கள் ஒருமையிலும் பன்மையிலும் குறிப்பிடப்பட்டிருப்பதனால், சில வேத ஆராய்ச்சியாளர்கள் பன்மையில் உள்ளவைகளை எருசலேம் குமாரத்திகளின் கூற்றாக விளக்கியுள்ளனர்.[97] ஆனால் அக்கால காதல் கவிதைகளில் இத்தகைய ஒருமை பன்மை மாற்றங்கள் கவிதைகளின் சிறப்பம்சமாக இருந்தன. ஒருவர் தன்னைப் பன்மையில் குறிப்பிடும் முறை அக்கால கவிதை வழக்காக இருந்தது.[98] இதனால் 4ம் வசனம் முழுவதையும் சூலமித்தியின் கூற்றாகவே உள்ளது. “ராஜா என்னைத் தமது அறைகளில் அழைத்துக்கொண்டு வந்தார்” என்னும் வாக்கியம் மூலமொழியின்படி “ராஜாவே, என்னை உமது அறைகளுக்குள் அழைத்துக் கொண்டு செல்லும்” என்று மொழிபெயர்க்கப்படவேண்டும். இது சாலொமோனேடு ஒன்றாக இருக்கவேண்டும் என்னும் ஆசையின் வெளிப்பாடாய் உள்ளது. காதலிக்கும் போது இத்தகைய ஆசைகள் இருப்பது இயற்கையே, ஆனால் அதற்கான உரிய காலம் வரும்வரை காத்திருக்க வேண்டியது அவசியம். ஆவிக்குரிய பிரகாரமாக

---

*of Songs: The New American Commentary*, p. 385; G.L.Carr, *The Song of Solomon: Tyndale Old Testament Commentaries*, p. 73). எனினும் இவர்கள் உன்னதப்பாட்டைத் பல பகுதிகள் கொண்ட தனி ஒரு பாடலாக ஏற்றுக் கொள்ளாமல் புத்தகத்தைப் பல பாடல்களின் தொகுப்பாகக் கருதுவதே இத்தகைய விளக்கத்திற்கான காரணமாய் உள்ளது. ஆனால் உன்னதப்பாட்டு தனி ஒரு பாடலாய் இருப்பதனாலும், திருமணம் வரை பாலுறவில் ஈடுபட வேண்டாம் என்று புத்தகத்தில் அறிவுறுத்தப்பட்டிருப்பதனாலும் இவ் விளக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. மேலும் இவ்வசனத்தில் ‘முத்தமிடுவாராக’ என்பதை ‘திராட்சை ரசத்தைத் தருவாராக’ என்று சிலர் மொழிபெயர்த்துள்ளனர் (R.E. Murphy, *The Song os Songs*, p. 125). ஆனால் இது அவசியமற்ற விளக்கமாகவே உள்ளது. பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பும் லத்தீன் மொழிபெயர்ப்பும் இவ்வசனத்திலும், 1:4, 4:10, 7:12 போன்ற வசனங்களிலும் ‘நேசம்’ என்பதை உமது ‘மார்பகங்கள்’ என்று குறிப்பிட்டுள்ளது. கிரேக்க மொழிபெயர்ப்பில் 6:11லும், இவ்வாக்கியம் சேர்க்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் எபிரேய வேதாகமம் உயிரெழுத்துக்கள் அற்ற வார்த்தைகளில் எழுதப்பட்டமையால், உயிரெழுத்துக்களைச் சேர்த்து மொழிபெயர்க்கும் போது இத்தகைய மாற்றம் ஏற்பட்டுள்ளதாக வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர் (G.L.Carr, *The Song of Solomon: Tyndale Old Testament Commentaries*, p. 73).

[96] S.Olyott, *A Life Worth Living and A Lord Worth Loving*, p. 84.

[97] ஆங்கிலத்தில் NIV மொழிபெயர்பிலும் நாம் இதனை அவதானிக்கலாம். இதனால் இதை அடிப்படையாகக் கொண்ட புதிய இலகு தமிழ் மொழிபெயர்ப்பிலும் 4ம் வசனத்தின் பன்மைக் கூற்றுக்கள் ‘தோழியரின்’ வார்த்தைகளாகவே குறிப்பிடப்பட்டுள்ளன.

[98] S.N.Kramer, *The Sacred Marriage Rite*, pp. 92-93.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

கிறிஸ்துவின் மணவாட்டியாகிய அவரது சபை அவரது வருகைக்காக ஆவலோடு காத்திருக்கின்றது. ஒருநாள் அவர் வந்து நம்மைத் தம்மோடு அழைத்துச் செல்வார்.

ஆரம்பத்தில் சூலமித்தி தனது சரீர அழகைப் பற்றிய மனக்குறையுடன் இருந்தாள். சாலொமோனைப் போல தான் சிவந்த மேனியுடன் (உன்.5:10) இல்லை என்பதை உணர்ந்து கொண்ட அவள், தான் கறுப்பாய் இருப்பதாகக் கூறுகிறாள். எனினும் தான் அழகில் குறைந்தவள் அல்ல என்பதையும் அவள் சுட்டிக்காட்டத் தவறவில்லை (1:5). இதை அவள், "தான் கேதாரின் கூடாரங்களைப் போலிருந்தாலும், சாலொமோனின் திரைகளைப் போலாவேன்.[99] நான் கறுப்பாயிருந்தாலும் அழகாயிருக்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளாள்.[100] சாலொமோனின் திரைகள் அழகிய சித்திரவேரைப்பாடுகள் கொண்டவைகளாகும்.[101]

தன்னாலும் அழகாகத் தோற்றமளிக்க முடியும் என்று தெரிவித்த சூலமித்தி தான் கறுப்பாயிருப்பதற்குக் காரணம், தான் திராட்சைத் தோட்டத்திற்கு காவலாளியாக இருந்தமையால், சூரியனின் கடும் உஷ்ணம் தன் சரீரத்தைக் கறுப்பாக்கிவிட்டதோடு, தன் சகோதரர்கள் தன்னைத் தோட்டத்திற்குக் காவலாளியாக வைத்தமையால் தன்னால் தன் சரீரத்தை அழகாக வைத்துக்கொள்ள முடியாமல் போய்விட்டது என்று கூறுகிறாள் (1:6).[102] "சூலமித்தி கடும் வெயிலில் வேலைசெய்யும் பெண்ணாக இருந்த மையால், வீட்டில் இருக்கும் பெண்களைப் போல தன்னை அழகுபடுத்திக் கொள்ளாத வளாக இருந்தாள்."[103] சரீரதோற்றத்தை அழகாக வைத்திருத்தல் தவறல்ல. மிகைப் படுத்தப்பட்ட அலங்காரமே தேவையற்றது. பல குடும்பங்களில் கணவன் வேறு பெண்களிடம் செல்வதற்கு மனைவி தன்னை அலங்கரித்துக் கொள்வதில் அசிரத்தை யாயிருந்து, அலங்கோலமாகவும் இருப்பதே காரணமாய் உள்ளது. எனினும் அழகு

---

[99] மூலமொழியின்படி 5ம் வசனத்தின் முதல் வாக்கியம் இவ்விதமாகவே மொழிபெயர்க்கப்பட வேண்டும். திருவிவிலியத்தில் இவ்வாக்கியம் "கேதாரின் கூடாரங்களைப் போலுள்ளேன். சாலமோனின் எழில் திரைகளுக்கு இணையாவேன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நமது வேதாகமத்தில் உள்ள விதமான மொழிபெயர்ப்பே சரி என்று கருதுபவர்கள், சாலொமோனின் கூடாரத்திரைகளைப் போல தான் கறுப்பாய் இருப்பதாக சூலமித்தி குறிப்பிட்டுள்ளதாகக் கூறுகின்றனர் (J.S.Deere, *Song of Songs: The Bible Knowledge Commentary Old Testament*, p. 1013). ஆனால், இங்கு எபிரேயக்கவிதைகளின் சிறப்பம்சமான சமத்தன்மையுடன் இவ்வசனம் எழுதப்பட்டுள்ளது. எனவே முதல் வரியில் சொல்லப்பட்டவிடயமே அடுத்தவரியில் வேறுவிதமாகச் சொல்லப்பட்டுள்ளது.

[100] 'கேதார்' என்பது தமஸ்குவிற்குத் தென் கிழக்கில் வாழ்ந்த நாடோடிக் கும்பலின் பெயராகும். இவர்கள் இஸ்மவேலின் இரண்டாவது மகனின் வம்சத்தினர். இவர்களது கூடாரங்கள் கரிய நிற ஆடு அல்லது ஒட்டகங்களின் தோலினால் செய்யப்பட்டவை.

[101] அண்மைக்கால ஆங்கில வேதாகமங்களில் இவ்வாக்கியத்தில் 'சாலொமோனின் திரைகள்' என்பது 'சாலொமோனின் கூடாரச் சீலைகள்' என்று குறிப்பிடப்பட்டிருப்பதனால், சாலொமோன் கூடாரவாசி இல்ல என்பதை ஆதாரமாகக் கொண்டு இவ்வாக்கியத்தில் சாலொமோன் என்பது 'சல்மா' என்றே இருக்க வேண்டும் என்று சில வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். 'சல்மா' என்பது இன்னுமொரு நாடோடிக் கும்பலின் பெயராகும் (R.Murphy & E.Huwiler, *Proverbs, Ecclesiastes, Song of Songs: New International Biblical Commentary*, p. 251). ஆனால் 80ம் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்ட இவ்வசனத்தின் கவித்துவம் இக்கருத்தை முரண்படுத்துகின்றது. மேலும் ஆரம்பகால வேதப் பிரதிகளில் இவ்வசனத்தில் சாலொ மோன் என்னும் பெயரே உள்ளது (D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The American Commentary*, p. 386).

[102] தான் திராட்சைத் தோட்டத்தை சரியாகக் காவல் காத்து வந்தாலும், தன் தோட்டத்தை (அதாவது தன் சரீரத்தை) ஒழுங்காகக் காக்காமல் போய்விட்டாள். தோட்டம் என்னும் வாத்தையை சொல்லர்த்த மாகவும் உருவகமாகவும் உபயோகிக்கும் சூலமித்தி, இவ்வசனத்தில் சூரியனையும் தன் சகோதரர்க ளின் கடுமையையும் சமப்படுத்தியுள்ளாள் (D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The American Commentary*, p. 387).

[103] D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The American Commentary*, p. 387.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

கவர்ச்சிகரமான தோற்றத்தில் அல்ல, சுத்தமாகவும் தேவையானதும் அவசியமானது மான அலங்காரத்துடனும் இருப்பதிலேயே உள்ளது. 6ம் வசனத்தில் "பாராதேயுங்கள்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளபதம் 'புறக்கணியாதீர்கள்' என்னும் அரத்தமுடையது. நான் கறுப்பாயிருக்கிறேன் என்று என்னைப் புறக்கணிக்க வேண்டாம் என்று அவள் குறிப்பிட்டுள்ளாள். உண்மையில் "அழகு தோலின் நிறத்தில் தங்கியிருப்பதில்லை"[104] மனிதர்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

சூலமித்தி தன் குறையை உணர்ந்து கொண்டாலும் தன் காதலனுடன் இருக்க விரும்பினாள். சாலொமோன் ஆரம்பத்தில் ஒரு மேய்ப்பனைப் போலவே சூலமித்தியை சந்திக்கச் சென்றமையால், 'அவன் தன் மந்தைகளை மத்தியானத்தில் எங்கே மடக்கு கிறான்' என்பதை அறிந்து கொள்ள முற்பட்டாள் (1:7). அக்கால மேய்ப்பர்கள் மந்தை களை மேய்த்த பின்னர், அவற்றிற்குத் தண்ணீர் கொடுத்துவிட்டு, பகற்பொழுதில் அவற்றை இளைப்பாறச் செய்வது வழமை.[105] உண்மையில், மந்தைகளை இளைப் பாற்றும் நேரமே மேய்ப்பன் ஓய்வாக இருக்கும் நேரமாகும். சாலொமோன் ஓய்வாய் இருக்கும் நேரத்தில் சூலமித்தி அவனைச் சந்திக்க விரும்பினாள். அவள் அவனது வேலையைக் குழப்ப விரும்பவில்லை.[106] மேலும், அவன் தான் இருக்கும் இடத்தைச் சொன்னால் தான் அவனைத் தேடி அலைந்து திரிய வேண்டியிருக்காது என்பதையும் அவள் கூட்டிக்காட்டியுள்ளாள்.[107] சாலொமோன் அடுத்த வசனத்தின் தன் மந்தையின் காலடிச் சுவடுகளைத் தொடர்ந்து வந்து தான் இருக்கும் இடத்தை அறிந்து கொள்ளும்படி கூறுகிறான் (1:8).[108]

மனைவி அழகாய் இல்லை என்று வேறு பெண்களிடம் செல்வது தவறாகும். அதேபோல காதலித்துக் கொண்டிருக்கும் பெண்ணைவிட அழகான ஒருத்தியைக் கண்டு விட்டால் பழைய காதலைக் கைவிட்டு புதிய உறவை ஆரம்பிப்பதும் தவறாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னுடைய காதலி அல்லது மனைவி அழகான வளாகவே இருக்க வேண்டும். தான் அழகாய் இல்லை என்று குறைபட்ட சூலமித்தியிடம் பேசும்போது "ஸ்திரீகளில் ரூபவதியே" என்றே சாலோமோன் அவளை அழைத்தான். உண்மையில், அவளது சரீர நிறம் எத்தகையதாய் இருந்தாலும்

---

104 J.A.Balchin, *The Song of Songs: The New Bible Commentary 21st Century Edition*, p. 621.

105 இதுபற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது, "கர்த்தரின் பராமரிப்பில் களிகூர்ந்திடும் பக்தன்" என்னும் புத்தகத்தின் இரண்டாம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

106 இன்றைய காதலர்கள் கருத்திற்கொள்ள வேண்டிய முக்கிய விடயம் இதுவாகும். வேலை நேரங்களை காதல் உரையாடலில் அலுவலகத் தொலைபேசியைத் தமதாக்கிக் கொள்வதும், வேலை நேரங்களில் வெளியில் சுற்றித்திரிவதும் தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும்.

107 பல வேத ஆராய்ச்சியாளர்கள் 7ம் வசனத்தில் 'அலைந்துதிரிகிறவள்' என்னும் சொற்பிரயோகம் விபச்சாரியைக் குறிக்கும் விவரணம் என்று கூறுவதோடு, ஆதியாகமம் 38:14ஐ இதற்கு ஆதாரமாகக் காண்பிக்கின்றனர். ஆனால், சூலமித்தி சாலொமோனைத் தேடி அலைவதைப் பற்றியே இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளமையால் இவ்விளக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. எனினும், அவள் ஒவ்வொரு மேய்ப்பனின் மந்தைகளின் பக்கமும் அலைந்து திரிந்தால் மற்றவர்கள் அவளை விபச்சாரியாக எண்ணிவிடலாம். உண்மையில் அவள் தன் பெயரைக் களங்கப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. ஒவ்வொரு பெண்ணிற்கும் இத்தகைய மனநிலை இருக்க வேண்டியது அவசியம்.

108 சிலர் இதை எருசலேம் குமாரத்திகளின் கூற்றாக விளக்குகின்றனர். (D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The American Commentary*, p. 388). ஆனால் இதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லை.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

அவனுக்கு அவள் முழுமையான அழகியாகவே இருந்தாள். இதனால் அவளது அழகை அவன் புகழ்ந்து வர்ணித்தான்.[109] மேலும், சூலமித்தி இரு ஆபரணங்களை மட்டுமே அணிந்திருந்தாலும் அவள் அழகானவளாய் இருப்பதாக அவன் குறிப்பிட் டுள்ளான் (உன்.1:10). அத்தோடு அவளுக்கு இன்னும் அதிகமான நகைக ளைச் செய்து கொடுப்பதாகவும் சாலொமோன் கூறுகிறான். நகைகள் அணிவது பாவமல்ல என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. ஆனால், கிறிஸ்தவர்களுக்கு நகைகள் அந்தஸ்தையும் பண அளவையும் காண்பிக்கும் அடையாளங்களாக இருக்கக்கூடாது. அதேசமயம், ஏழைக்கிறிஸ்தவர்களுக்கு இடறலாகவும் அவர்கள் இருக்கக்கூடாது.

உன்னதப்பாட்டு 1:12-3:5ல் சாலொமோனினதும் சூலமித்தியினதும் காதல் வளர்ச்சி யடைந்து வருவதை நாம் அவதானிக்கலாம். இப்பகுதியில் இருவரும் ஒருவரை யொருவர் நினைத்து மகிழ்வதும் உரையாடுவதும் கனவு காண்பதும் சித்தரிக்கப் பட்டுள்ளது. சூலமித்தி சாலொமோனைப் பற்றிய நினைவுகளில் இன்பமடைகிறாள் “தான் அவனுக்கு இன்பமளிக்கும் நளதைலமாக இருப்பதாக உவமிக்கும் சூலமித்தி” (உன்.1:12),[110] அவனைப் பற்றிய நினைவுகள் தனக்கு சுகந்த வாசனையாய் இருப்ப தை அவள் அறியத்தருகின்றாள் (உன்.1:13).[111] இதனால் அவன் மிகவும் சிறப்பானவ னாகவும் ஒப்பற்றவனாகவும் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளாள் (உன்.1:14).[112] சாலொ மோனும் சூலமித்தியின் அழகைப் புகழ்கின்றான். “அழகிய கண்கள் பெண்ணின் பூரணத்தையும் ஆள்தத்துவத்தின் சிறப்பையும் குறிப்பதாக அக்காலத்தில் கருதப்

---

[109] 9ம் வசவனத்தில் சாலொமோன் தன் காதலியை குதிரைக்கு ஒப்பிடுவது பொருத்தமற்ற விவரணமாக நாம் கருதலாம். ஆனால் அக்காலத்தைய அரசங்கள் பெண்களைவிட குதிரைகயை உயர்வானவைக ளாகக் கருதி அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். சாலொமோன் தான் எகிப்தி லிருந்து கொண்டுவந்த இரதத்தையே இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளதாகக் கருதப்ப டுகின்றது (1ராஜா.4:26, 10:28). இரதங்களை இழுத்தச் செல்வதற்கு ஆண் குதிரைகளே உபயோகிக்கப்பட்ட போதிலும், சாலொமோன் குறிப்பிடும் ‘பரிகள் பவுஞ்சு’ என்பது பெண்குதிரையாகும். (இதனால் புதிய இலகு தமிழ் மொழிபெயர்ப் பில் இவ்வசனத்தை “பார்வோனின் தேர்களில் பூட்டப்பட்ட பெண்குதிரை” என்று குறிப்பிட்டுள்ளனர். திரு விவிலியத்தில், “பார்வோன் தேர்ப்படை நடுவே உலவும் பெண்புரவிக்கு உன்னை ஒப்பிடுவேன்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). இது இரதங்களை இழுக்கும் குதிரை அல்ல மாறாக இரதத்திற்கு முன்னால் செல்லும் அழகிய பெண் குதிரையாகும். ‘ஆண்’ குதிரைகளே இரதங்களை இழுக்க உபயோ கிக்கப்படும். எனவே இவற்றின் முன்னால் செல்லும் பெண் குதிரை தனித்தவமானதாக இருக்கும். சூலமித்தி ஒப்பற்றவள் என்பதையே சாலோமோன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளான்.

[110] D.F.Kinlaw, *Song of Songs: The Expositor’s Bible Commentary Volume 5*, p. 1220. நளதைலம் இந்தியாவின் ஹிமாலயப் பிரதேசத்தில் வளரும் ஒருவகைச் செடியிலிருந்து தயாரிக்கப் படும் வாசனைத் தைலமாகும். அது மிகவும் பெறுமதியானதும், அரிதாகக் காணப்படுவதும், சிறந்த வாசைனயுடையதாகவும் இருந்தது (G.L.Carr, *The Song of Solomon: Tyndale Old Testament Commentaries*, pp. 84-85).

[111] அக்காலப் பெண்கள் நறுமணமிக்க நாறினாலான சரமொன்றை மாலையாக அணிந்திருப்பது வழமை. அதில் வாசனைத் திரவியங்கள் சுற்றப்பட்ட சிறிய பொதியொன்றும் தொங்கவிடப்பட்டிருக்கும். இப் பொதியானது, மார்பகங்களுக்கிடையில் இருக்கும் விதத்தில் சரமானது அணியப்பட்டிருக்கும். சூலமித் தியும் இத்தகைய சரமொன்றை அணிந்திருந்தமையால் சாலொமோனை தான் அணிந்திரக்கும் சரத்தி லுள்ள வாசனைத்திரவியப்பொதிக்கு ஒப்பிடுகின்றாள். உண்மையில் அவளது நினைவுகளில் அவளது காதலன் அவளது மார்பகங்களுக்கிடையில் இருக்கின்றான். ‘என் ஸ்தனங்களின் நடுவில் தங்கும் வெள்ளைப் போளச் செண்டு’ என்னும் விவரணம் இதையே குறிக்கின்றது. சரத்திலிருக்கும் வாசனைத் திரவியப் பொதி நித்தமும் அவளுக்கு சுகந்தத வாசனையைத் தருவது போல சாலொமோனது நினை வுகளும் தனக்கு இனிமையான சுகந்தத்தைத் தருவதாக சூலமித்தி இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளாள் (S.C.Glickman, *A Song for Lovers*, p. 37).

[112] ‘எங்கேதி’ என்பது சாக்கடலின் மேற்கக் கரையிலுள்ள ஒரு பாலைவனப் பசுந்தரையாகும். எனவே சூலமித்தி தன் காதலனை மற்றவர்களுடன் ஒப்பிடும் போது மற்றவர்கள் எல்லோரும் பாலைவனமாகவும் அவன் மட்டுமே பசுந்தரையாகவும் இருந்தான். மேலும் எங்கேதியின் திராட்சைத் தோட்டங்களில் முளைக்கும் மருதோன்றிப் பூங்கொத்து என்றும் அவள் சாலொமோனைக் குறிப்பிட்டுள்ளாள். இது மனதைக் கவரும், அத்தோட்டத்திற்கு சிறப்பாயிருக்கும் மிகவும் அழகிய பூங்கொத்தாகும்.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

பட்டது.”[113] எனவே சூலமித்தி அழகானவள் என்பதைக் குறிப்பிடவே அவளது கண்கள் புறாக் கண்கள் என்று சாலொமோன் கூறியுள்ளான் (உன்.1:15).[114] இதேவிதமாக சூலமித்தியும் சாலொமோனின் அழகைப் புகழ்கின்றாள் (உன்.1:16). 16ம் வசனத்தில் ‘மஞ்சம் பசுமையானது’ என்பது இருவரும் அமர்ந்து உரையாடிய பசும் புற்தரையைப் பற்றிய விவரணமாகும். 17ம் வசனம் உண்மையான வீட்டைப் பற்றி கூறவில்லை. இது அவர்கள் அமர்ந்து உரையாடிய பசும்புற்தரையின் அருகில் இருந்த மரங்கள் அத்தனையும் அவர்களுக்கு ஒரு வீடு போல இருந்ததைப் பற்றிய விவரணமாகும்.[115]

சாலொமோனுக்கும் சூலமித்திக்கும் இடையிலான காதல் வளர்ச்சியடைந்திட, தன் சரீர அழகைப் பற்றிய தனது மனப்பாங்கை மாற்றிக்கொள்கின்றாள். ஆரம்பத்தில் தான் கறுப்பாய் இருப்பதாகக் கவலைப்பட்டவள் இப்பொழுது, நான் சாரோனின் ரோஜாவும் பள்ளத்தாக்குகளின் லீலிபுஷ்பமுமாயிருக்கின்றேன்” (உன்.2:1)[116] என்று மகிழ்வுடன் கூறுகிறாள். சாலொமோன் தன்னை எவ்வாறு பார்த்தானோ அவ்விதமாக அவள் இப்போது தன்னைப் பார்க்கத் தொடங்கினாள். காதலனின் பார்வையில் தான் அழகாயிருப்பதை அறிந்து கொண்ட சூலமித்தி தான் அழகாய் இருப்பதாகத் திருப்திடைந்தாள். கிறிஸ்தவப் பெண்கள் இத்தகைய மனப்பாங்குடன் இருக்க வேண்டியது அவசியம். அவர்கள் அழகுராணிப் போட்டியில் கலந்துகொள்கிறவர்களாக அல்ல, தங்கள் கணவனின் அல்லது காதலனின் பர்வைக்கு அழகாய் இருந்தால் போதும். சூலமித்தி தன்னை சாதாரண மலர்களுக்கு ஒப்பிட்டு தன் அழகில் மகிழ்வ டைந்தாலும், சாலொமோன் அதைவிட அதிகமாக அவளது அழகைப் புகழ்ந்தான். இதனால் மற்ற பெண்கள் எல்லோருமே முற்கள், தன் காதலி மட்டுமே மலர் என்று குறிப்பிட்டுள்ளான் (2:2).[117] உண்மையில் கிறிஸ்தவ ஆண்களும் சாலொமோனைப் போல தங்களது மனைவியை (அல்லது காதலியை) மட்டுமே மலராகப் பார்க்க வேண்டும்.[118]

சாலொமோனுக்கு சூலமித்தி எவ்வாறு விசேஷித்தவளாக இருந்தாளோ, அதேவிதமாக சூலமித்திக்கு சாலொமோன் சிறப்பானவனாக இருந்தான். அவளுக்கு சாலொமோன்

---

[113] G.L.Carr, *The Song of Solomon: Tyndale Old Testament Commentaries*, p. 86.

[114] இக்காலத்தில் கண்கள் இதயத்தின் வாசலாகக் கருதப்பட்டது. அழகிய கண்களையுடையவள் நற்குணமுடையவள் என்று யூதமதப் போதகர்கள் கருதினார்கள். இதனால் சூலமித்தியின் உள்ளான அழகைப் பற்றியே சாலொமோன் இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளதாக சில வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர் (S.M.Lehrman, “The Song of Songs” in *The Five Megilloth*, p. 4). ஆனால் காதல் வசப்பட்டவன் உட்புற அழகை அல்ல வெளிப்புற அழகைப் பற்றியே அதிகமாகச் சிந்திப்பதனாலும், சாலொமோன் சூலமித்தியின் வெளிப்புற அழகையே வர்ணிப்பதனாலும், இவ்வசனத்தை உள்ளத்தின் அழகைப் பற்றிய விவரணமாகக் கருதமுடியாது (S.Olyott, *A Life Worth Living and A Lord Worth Loving*, p. 87).

[115] J.S.Deere, *Song of Songs: The Bible Knowledge Commentary*, p. 1014.

[116] சாரோன், செசரியாவிலிருந்து யோப்பா வரையுள்ள இஸ்ரவேலின் வளமான கரையேர நிலப்பகுதி.

[117] மறைபொருள் அர்த்தவிளக்கத்தில் இயேசுகிறிஸ்து முள்முடி சூட்டப்பட்டவராக சிலுவையில் இருப்ப தாக இவ்வசனம் வியாக்கியானம் செய்யப்பட்டாலும், இது சூலமித்தியைப் பற்றிய விவரணமாய் இருப்ப தை நாம் கருத்திற்கொள்ள வேண்டும். எனவே சபையே முள்ளுகளுக்குள் இருப்பதாகக் கூறவேண்டும். இது அர்தமற்ற விளக்கம்.

[118] இதனால் பெண்கள் எல்லோருமே முற்கள் என்று அவர்களை தரக்குறைவாகக் கணிப்பிடுவது தவறாகும். ஒருவன் தன் மனைவியத் தவிர மற்றபெண்களிடம் மயங்கக் கூடாது என்பதே இதன் அர்த் மாகும்.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

மட்டுமே நறுமணம் கமழும் கிச்சிலி மரமாக இருந்தான் மற்ற ஆண்கள் எல்லோரும் காட்டுமரங்களாகவே இருந்தனர் (உன்.2:3).[119] சாலொமோன் தனக்க எப்படிப்பட்டவனாக இருக்கின்றான் என்பதை அறியத்தரும் சூலமித்தி, “அதின் நிழலிலே வாஞ்சையாய் உட்காருகிறேன்’’ என்று குறிப்பிட்டுள்ளாள். “நிழலில் உட்கா்தல்’’ என்னும் சொற் பிரயோகம் அக்காலத்தில் பாதுகாப்பைக் குறிக்கும் விவரணமாய் இருந்தது. முன்பு வெய்யிலில் வேலைசெய்து வேதனைப்பட்டவள் (உன்.1:6), இப்போது காதலனின் பாதுகாப்பில் இருந்தாள். மேலும் இருவரும் ஒருவரையொருவா் நன்றாகப் புரிந்து கொள்ளும் வண்ணம் அவா்கள் தங்கள் காதலை வளா்த்திருந்தனா். “வாய்க்கு மதுரமாயிருந்தது’’ என்னும் சொற்பிரயோகம் உருவகமாக உபயோகிக்கப்படும் போது, நெருக்கமான உறவின் மூலம் ஒருவரைப் பற்றி அறிந்து கொள்தல் என்னும் அா்த்தமுள்ளது. எனினும் இதைப் பாலியல் உறவென்று தவறாக விளங்கிக் கொள்ளக்கூடாது. (சங்.34:8 ஒப்பிடவும்). அத்தோடு, சாலொமோன் தன் காதலைப் பகிரங்கப்படுத்தியதற்காகவும் சூலமித்தி அவனைப் புகழ்கின்றாள் (உன்.2:4). “என்மேல் பறந்த அவருடைய கொடி நேசமே’’ என்பதில், கொடி ராணுவம் அணிவகுத்தச் செல்லும் போது சகலருக்கும் தென்படுவது, சாலொமோன் தன் மீது வைத்த அன்பு இத்தகைய கொடியாய் சகலருக்கும் தெரியவந்துள்ளதை அவள் குறிப்பிடுகிறாள். விருந்துசாலையில் அவா்கள் இருவரையும் பாா்க்கும் மற்றவா்களால இவா்கள் காதலா்கள் என்பதை அறிந்து கொள்ளக்கூடியதாய் இருந்தது. இரகசியக் காதல் ஏமாற்றும் நோக்கமுடையது என்பது உண்மையே.

சாலெமோனுடனான காதலைப் பற்றி சிந்தித்தக் கொண்டிருந்த சூலமித்தி காதல் மயக்கத்தில் இருந்தாள். “நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன்’’ என்னும் சொற் பிரயோகம் (உன்.2:5), மூலமொழியில் “காதல் நோய்வாய்ப்பட்டிருக்கிறேன்’’ என்றே உள்ளது.[120] எனவே அக்காலத்தில் புத்துணா்ச்சியளிக்கக்கூடிய பழங்களினால் தன்னைத் தேற்றும்படி அவள் கூறுவதோடு (உன்.2:5), தான் அவனது அரவணைப்பில் இருப்பதாகவும் கனவு காண்கின்றாள் (உன்.2:6). காதலிக்கும் போது இத்தகைய கனவுகள் வருவது இயற்கை என்றாலும், திருமணத்திற்கு முன் பாலுறவில் ஈடுபடி முற்படக்கூடாது, இதனால், உரிய காலம் வரும்வரை இத்தகைய ஆசைகளைத் தூண்டிவிடவேண்டாம் என்னும் அறிவுறுத்தல் மறுபடியுமாகக் கொடுக்கப்பட்டுள்ளது (உன்.2:7).

---

[119] ‘கிச்சிலி’ என்பது ஆங்கில வேதாகமங்களில் ‘அப்பிள்’ என்று மொழிபெயா்க்கப்பட்டுள்ளபோதிலும், மூலமொழியின்படி இது ‘அப்ரிகொட்’ என்று வேதஆராய்ச்சியாளா்கள் கூறுகின்றனா் (M.V.Fox, *The Song of Songa and the Ancient Egyptian Love Songs*, p. 107). எனினும் மூலமொழில் உபயோகிக்கப்பட்டுள்ள பதம் சுகந்த வாசனையும் இனிய சுவையும் கொண்ட பழத்தைக் குறிக்கின்றது (G.L.Carr, *The Song of Solomon: Tyndale Old Testament Commentaries*, p. 89).

[120] திருவிவிலியத்தில் “காதல் நோயால் நான் மிகவும் நலிந்து போனேன்’’ என்று இவ்வாக்கியம் மொழிபெயா்க்கப்பட்டுள்ளது. சில ஆங்கில வேதாகமங்களில் “காதலில் மயங்கியிருக்கிறேன்’’ என்று குறிப்பிடப்பட்டிருப்பது திருப்திகரமான மொழிபெயா்ப்பு அல்ல. “காதலில் ஒருவா் மற்றவருக்காக ஏங்குவது காதல் நோய் என்றே அக்கால இலக்கியங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது’’ (D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, p. 392).


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

உன்னதப்பாட்டு 2:8-17ல் சாலொமோனும் சூலமித்தியும் சந்திக்கும் இன்னுமொரு சாட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. இது சூலமித்தியின் கிராமத்தில் நடைபெற்ற சம்பவமாக் கருதப்படுகின்றது. உன்னதப்பாட்டு 2:8 சாலொமோன் வரும் சத்தம் கேட்பதைப் பற்றிய சூலமித்தியின் கூற்றாகும். சாலொமோனை வெளிமானுக்கும் மரக்குட்டிக்கும் ஒப்பிடுவது, அவனது கவர்ச்சிகரமான தோற்றம், வல்லமை, சுறுசுறுப்பு என்பவற்றைக் குறிப்பிடும் விவரணமாய் உள்ளது (உன்.2:9). சூலமித்தியைப் பார்க்க ஆவலாயிருந் தவன் கதவைத் தட்டி அது திறக்கும் பரை காத்திராமல் பலகணி வழியாய் உள்ளே பார்க்கின்றான் (உன்.2:9). அவளைத் தன்னோடே வெளியே வரும்படி கூறுகின்றான் (உன்.2:10). 11 முதல் 13 வரையிலான விவரணம், சூலமித்தியின் கிராமத்தின் சூழ்நி லையைப் பற்றியது. இது வசந்த காலத்தின் ஆரம்பத்தை அறியத்தருகின்றது. அதேசமயம் அவர்களது காதலும் வசந்த காலத்தில் இருப்பதை இவ்விரணம் அறியத்தருவதாகக் கருதப்படுகின்றது. 14ம் வசனத்தின் புறாவின் விவரணம், சூலமித்தியின் நாணத்தையும், அடக்கத்தையும், அவனுடன் செல்வதற்கான தயக்கத் தையும் உருவகிக்கின்றது. சாலொமோன் அவளது முகத்தைப் பாக்கவும் அவளது குரலைக் கேட்கவும் ஆசையாய் இருந்தான்.

தன்னோடு வரும்படி அழைக்கும் காதலனிடம், திராட்சைத்தோட்டத்தைக் கெடுக்கும் குழிநரிகளையும் சிறுநரிகளையும் பிடிக்கும்படி சூலமித்தி கூறுகிறாள் (உன்.2:15). இவ்வசனத்தில் இருவருக்கும் இடையிலான காதலே திராட்சைத் தோட்டமாக உவமிக்கப்பட்டுள்ளது. இதனால் தோட்டத்தைக் கெடுக்கும் நரிகள், காதலுறவைப் பாதிக்கும் விடயங்கள் அனைத்தையும் குறிக்கின்றன.[121] "திராட்சைத்தோட்ங்கள் பூவும் பிஞ்சுமாயிருக்கிறது" என்னும் விவரணம், அவர்களது காதல் இருக்கும் நிலையைச் சுட்டிக்காட்டுகறது. இது திருமணமாக மலர்வதைத் தடுக்கும் நரிகளாக, காதலுறவைப் பாதிக்கும் தீங்குவிளைவிக்கும் கட்டுப்படுத்த முடியாத ஆசைகள் (ஈவை குற்ற உணர்வை ஏற்படுத்தும்), அன்பின் பிணைப்பை உடைக்கும் நம்பிக்கையின்மை, பொறாமை, தவறை உணர்ந்து கொள்ளாத தன்மை, சுயநலம், பெருமை, மன்னியாமை என்பன இருக்கலாம்.[122] காதலில் பிரச்சனைகள் வருவது இயற்கை. இருவருமாக சேர்ந்து அவற்றைத் தீர்க்கவேண்டும். காதல் திருமணமாக மலர்வதைத் தடுக்கும் சகலவற்றையும் அகற்றும் வலிமையும் பக்குவமும் இருக்க வேண்டியது அவசியம். தங்களுடைய காதலில் சில பிரச்சனைகள் இருந்தாலும், தன் காதலன் தன்னுடைய வன், தான் அவனுடையவள் என்பதைச் சூலமித்தி அறிந்திருந்தாள் (2:16). அவன் தன்னை முத்தமிடுவதனால்,[123] இரவு முழுவதும் (பகல் குளிர்ச்சியாகி நிழல் சாய்ந்து

---

[121] F.Delitzsch, *Song of Songs*, pp. 53-54. காதலர்கள் ஓடிபித்து விளையாடும் ஒருவகை விளையாட்டே இங்கு நரிகளைப் பிடிப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்னும் சிலரது விளக்கம் (D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, p. 394) ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

[122] S.C.Glickman, *A Song for Lovers*, pp. 49-50; J.S. Deere, *Song of Songs: The Bible Knowledge Commentary Old Testament*, pp. 1015-1016).

[123] "லீலி புஷ்பங்களுக்குள்ளே மேய்கிறார்" என்னும் சொற்பிரயோகம் என்ன அர்த்ததத்தில் உபயோகிக் கப்பட்டுள்ளது என்பது பற்றிய சர்ச்சை வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் காணப்படுகின்றது. உன் னதப்பாட்டில் லீலி புஷ்பம் சூலமித்தியை மட்டுமல்ல (உன்.2:2), சாலொமோனின் உதடுகளையும் (உன்.5:13), சூலமித்தியின் மார்பகங்களைச் சுற்றியிருக்கும் பகுதியையும் (உன்.4:5) குறிக்கும் உருவக


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

போகும் வரைக்கும், அதாவது மாலை மயங்கும் பொழுதிலிருந்து காலையில் இருள் நீங்கும் வரைக்கும்) தன்னோடு இருக்கும்படி கூறுகின்றாள் (உன்.2:17).[124] காதலிக்கும் போது இத்தகைய ஆசைகள் வருவது இயற்கை என்றாலும், சாலொமோன் திருமணத்தின் பின்பே, அவளது இக்கோரிக்கைக்குச் சம்மதித்தான் (உன்.3:6). இத்தகைய கட்டுப்பாடு காதலர்களுக்கு இருக்க வேண்டியது அவசியம்.

உன்னதப்பாட்டு 3:1-5 சாலொமோன் சென்ற பின்னர் சூலமித்தி கண்ட கனவாகும்.[125] "இராக்காலத்தில் என் படுக்கையிலே என் ஆத்தும நேசரைத் தேடினேன் என்னும் விவரணம் அவள் கண்ட கனவைப் பற்றிய குறிப்பாகவே உள்ளது."[126] அவள் தான் கனவில் கண்டவற்றை இப்பகுதியில் குறிப்பிட்டுள்ளாள்.[127] காதலிக்கும் காலத்தில் காதல் நிறைவேறுமா என்னும் சந்தேகம் ஏற்படுவது இயற்கையே. சூலமித்திக்கும் தான் சாலொமோனை இழந்துவிடுவேனோ என்னும் ஏற்பட்டது. அவள் கனவில் தன் காதலனை இழந்து விட்டாள் (உன்.3:1). அவள் கனவில் தன் காதலனைத் தேடி நகரத்திற்குப் போகிறாள் (உன்.3:2-3). நகரக் காவலாளரிடம் சாலொமோனைப் பற்றி விசாரிக்கின்றாள் (உன்.3:4), அவனைக் கண்டுபிடித்த பின்னர், மிகவும் பாதுகாப்பான இடம் என்று அவள் கருதிய தன் தாயின் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வருகிறாள் (3:5).

## (ஆ). திருமண நாளின் களிப்பான வாழ்வு (உன்.3:6-5:1)

உன்னதப்பாட்டின் இரண்டாம் பகுதியில் அதாவது 3:6-5:1ல் சாலொமோனினதும் சூலமித்தியினதும் திருண வைபவமும், இவர்களது முதலிரவும் சித்தரிக்கப்பட்டுள்ளது. யூதர்களைப் பொருத்தவரை அவர்களது திருமண வைபவத்தின் முக்கிய அம்சம் மணமகன் மணமகளின் வீட்டிற்கு தனது தோழர்களுடன் ஊர்வலமாக வந்து அவளைத் தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு செல்வதாகும். உன்னதப்பாட்டில் மூன்றாம் அதிகாரம் 6 முதல் 11 வரையிலான வசனங்கள் இவ்வூர்வலம் பற்றிய விவரணமாகும். அக்கால வழமையின்படி வாசனைத் திரவியங்களைப் பற்றவைத்துக் கொண்டு ஊர்வலம் வருவதனால் அது சுகந்த வாசனையை வீசுவதோடு, தூரத்துப்பர்வைக்கு புகைத் தூண்கள் வருவது போல காட்சியளிக்கின்றது. 6ம் வசனத்தின் விவரணம் இதையே குறிக்கின்றது. 7ம் வசனத்தில் 'மஞ்சம்' என்று மொழிபெயர்க்கப்பட்டிருப்பது ஒருவகைப் பல்லக்கு ஆகும். சாலொமோன் 60 தோழர்களுடன் பல்லக்கில்

---

விவரணங்களாக உபயோகிக்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட ஜேம்ஸ் அரசனின் ஆங்கில வேதாகமத்தில் மேய்கிறார் என்பது "மந்தைகளை மேய்க்கிறார்" என்று மாற்றப்பட்டுள்ளபோதிலும், மூலமொழியில் மந்தைகளைப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. இது மேய்ப்பன் கதாபாத்திரத்திற்கு ஏற்றவிதத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, லீலிபுஷ்பமாக சூலமித்தி இருப்பதனால், "முத்தமிடுவதே லீலி புஷ்பங்க ளுக்குள் மேய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது" (D.Hubbard, *Ecclesiastes, Song of Solomon: Mastering the Old Testament*, p. 294) என்று வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். "இது அவள் கொடுக்கும் இன்பங்க ளை அனுபவிப்பதைக் குறிக்கும் விவரணமாகும்" (D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, p. 395).

[124] "குன்றும் பிளப்புமான கன்மலை" மார்பகங்கைக் குறிக்கும் விவரணமாகும் (*Ibid*. p. 395).

[125] F.Delitzsch, *Song of Songs*, p. 57.

[126] J.S. Deere, *Song of Songs: The Bible Knowledge Commentary Old Testament*, p. 1016.

[127] D.Hubbard, *Ecclesiastes, Song of Solomon: Mastering the Old Testament*, p. 295.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

வருகிறான்.[128] அக்காலத்தில் திருமண ஊர்வலங்கள் இரவு நேரத்திலேயே நடை பெற்றமையால் அணிந்திருக்கும் ஆபரணங்களை அல்லது மணமகளை கள்ளவர்கள் அபகரித்துக் கொண்டு போய்விடலாம் என்பதனால் இத்தகைய ஊர்வலத்தில் செல்பவர்களுக்கு இருக்கும் அச்சமே 8ம் வசனத்தில் 'இராக்காலப் பயம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் சாலொமோனின் தோழர்கள் எந்த எதிர்ப்பையும் சமாளிப்பதற்கு ஆயத்தமுள்ளவர்களாகத் தங்கள் பட்டயங்களைக் கைகளில் பிடித்த வண்ணம் இருந்தனர் (உன்.3:8). மணமகன் கோலத்தில் சூலமித்தியின் வீட்டிற்குச் சென்று, அவளை ஒரு இரதத்தில் தனது அரன்மணைக்குச் சாலொமோன் அழைத்துச் செல்கின்றான். இந்த ரதத்தின் விவரணமே 9ம் 10ம் வசனங்களில் சித்தரிக்கப் பட்டுள்ளது. அக்கால வழக்கத்தின்படி திருமண நாளில் சாலொமோன் ராஜஉடையில் இருப்பதை 11ம் வசனம் அறியத்தருகின்றது.

உன்னதப்பாட்டு 4:1-5:1 சாலொமோனினதும் சூலமித்தியினதும் முதலிரவைப் பற்றிய விவரணமாகும். 4ம் அதிகாரத்தின் முதல் ஏழு வசனங்களிலும் சாலொமோன் சூலமித்தியின் அழகை வர்ணித்துப் புகழ்கின்றான். இதில் அவன் அவளது சரீரத்தின் ஏழு அவயவங்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளதை நாம் அவதானிக்கலாம் (கண்கள்,[129] கூந்தல்,[130] பற்கள்,[131] உதடுகள்,[132] கன்னங்கள்,[133] கழுத்து,[134] மார்பகம்[135] 4:1-6).[136] 6ம் வசனம் உன்னதப்பாட்டு 2:17ன் சூலமித்தியின் கோரிக்கைக்கான பதிலாய்

---

[128] இவர்கள் யுத்தத்திற்குப் பழகினவர்கள் என்று 8ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதனால், இவர்கள் சாலொமோனின் மெய்ப்பாதுகாவலர்கள் என்று சில வேதஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர் (J.S. Deere, *Song of Songs: The Bible Knowledge Commentary Old Testament*, p. 1017). வழமையாக 60 யுத்த வீரர்கள் திருமண ஊர்வலத்தில் செல்வதில்லை என்று கூறும் வேதஆராய்ச்சியாளர்கள் இவர்களை சாலொமோனின் தன்மையைக் குறிக்கும் விவரணமாகக் கருதுகின்றனர். அதாவது சாலொமோன் ராஜரீகத்துடன் மட்டுமல்ல வல்லமையுடனும் வருகின்றான் என்பதை அறியத்தரும் விவரணமே பட்டயம் தரித்த 60 யுத்த வீரர்களால் உவமிக்கப்பட்டுள்ளதாக இவர்கள் கருதுகின்றனர் (D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, p. 395). சிலர் இவர்களை, முதலிரவில் மணமகனைக் கொல்ல முற்படும் பிசாசுகளைத் தடுக்கும் மந்திரப் பொருளைக் குறிக்கும் விவரணமாகக் கருதுகின்றனர் (M.H.Pope, *Song of Songs: Anchor Bible Commentary*, pp. 435-440). ஆனால் இவ்விளக்கங்கள் எவ்வித ஆதாரமும் அற்றவைகளாகவே உள்ளன.

[129] முதலாம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் முக்காடு உண்மையில் முகத்திரையாகும். திருணத்தின் போது அணியப்படும் முகத்திரை முதலிரவில் கணவனோடு தனித்திருக்கும் பொதே கலையப்படும் (ஆதி.24:65, 29:19-25). சாலொமோன் முகத்திரையினூடாக அவளது கண்களைப் பார்த்தே வர்ணிக்கின்றான் (J.S. Deere, *Song of Songs: The Bible Knowledge Commentary Old Testament*, p. 1017).

[130] மாலை மயங்கும் வேளையில் மலைச்சாரலில் கூட்டமாகச் செல்லும் மந்தைகளைத் தூரத்திலிருந்து பார்க்கும் போது தென்படும் அழகு வெளது கூந்தலுக்கு உள்ளது (உன்.4:1). கீலேயாத் மலை, கில்காலில் யோர்தானுக்குக் கிழக்குப் பக்கத்தில் உள்ளது. இப்பகுதி செழிப்பான புல்வெளியாகும். அவளது நீண்ட வளைந்து நெளியும் கூந்தல் அவனது மனதைக் கவர்ந்துள்ளது (*Ibid*. p. 1017).

[131] பற்கள் வெண்மையானவை. (குளிப்பாட்டப்பட்டு கரையேறுகிற மந்தை). அத்தோடு முழுமையாகப் பொருந்துபவை (இரட்டைக் குட்டிகள்) (உன்.4:2). அவளுடைய சிரிப்பினால் வெளிப்பட்டவை (*Ibid*. p. 1017).

[132] உதடுகள் சிவந்தவை. மெல்லியவை. வார்த்தைகளும் இன்பமானவை (உன்.4:3).

[133] மாதுளம்பளத்தின் உட்புறம் போல சிவந்தவை (உன்.4:3).

[134] அவள் ஒரு மகாராணிக்குரிய தோரணையில் இருந்தமையால் கழுத்தை தாவீதின் கோபுரத்திற்கு ஒப்பிட்டுள்ளான் (உன்.4:4). இது ஆயுதங்கள் தொங்கவிடுவதற்காக கட்டப்பட்ட கோபுரம். "எகிப்தியர்கள் நீண்ட கழுத்துள்ள பெண்களைக் கவர்ச்சிகரமானவர்களாகக் கருதினாலும், சூலமித்தியின் கழுத்தின் நீளத் தைப் பற்றிய விவரணமாக இது இல்லை அவள் யாராலும் மேற்கொள்ள முடியாத வலிமை பொருந்திய வளாய் இருந்ததைக் குறிப்பிடவே இவ்வாறு அவளது கழுத்து உவமிக்கப்பட்டுள்ளது" (D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, p. 405).

[135] வெளிமான் குட்டியின் நிறமோ, உருவமோ இதில் உவமானமாகக் குறிப்பிடப்படவில்லை. அவைகளின் மிருதுவான தன்மையே உவமானமாய் உள்ளது (உன்.4:5).

[136] 6ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இரு மலைகளையும் பற்றிய விவரணம், சூலமித்தியின் மார்பகங்களைப் பற்றிய விவரணம் என்று வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

உள்ளது. திருணத்திற்கு முன் இரவுமுழுவதும் (பகல் குளிர்ச்சியாகி நிழல் சாய்ந்து போகும் வரைக்கும் என்னும் விவரணம் இதையே குறிக்கின்றது) தன்னோடு இருக்கும் படி சூலமித்தி கேட்டாள். ஆனால் இப்போதே அதற்கான காலம் வந்திருக்கின்றது என்பதை சாலேமோன் அவளுக்கு உணர்த்துகிறான். உன்னதப்பாட்டு வலியுறுத்திக் கூறும் விடயம் இதுவாகும். திருமணத்திற்கு முன்னர் ஆணும் பெண்ணும் ஒன்றாக இருப்பதற்கு வேதம் அனுமதி கொடுக்கவில்லை என்பதற்கு வேதாகமத்தில் உன்னதப்பாட்டே சிறந்த உதாரணமாய் உள்ளது. யூதர்களுடைய கலாச்சாரத்தில் ஏழு முழுமையையும் பூரணத்தையும் குறிக்கும் இலக்கமாய் இருப்பதனால், சூலமித்தியின் ஏழு அவயவங்களைப் புகழும் சாலொமோன் அள் பூரணமான அழகி, அவளில் பழுதொன்றும் இல்லை என்று 7ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளான்.

சூலமித்தியின் அழகைப் புகழ்ந்த சலொமோன், அடுத்து அவளது மனதை அவளது பிறந்த வீட்டிலிருந்து தன்னிடத்தில் கொண்டுவரும்படி கூறுகின்றான். “லீபனோனி லிருந்து என்னோடே வா” (4:8) என்னும் அழைப்பு இதையே குறிக்கின்றது. சூலமித்தி லீபனோனைச் சேர்ந்தவள். எனவே தன்னோடு எருசலேமில் இருக்கும் அவளை லீபனோனிலிருந்து வரும்படி சொல்வது இத்தகைய அர்த்தமுடைய கூற்றாகவே உள்ளது.[137] அமனாவும், சேனீர் எர்மோனும் லீபனோனுக்கு அருகில் இருக்கும் இரு மலைகளாகும். உண்மையில் பல குடும்பங்களில் திருமணத்தின் பின்பு மனைவி தன் பிறந்த வீட்டின் பெருமைகளைப் பற்றியும், வாழ்ந்த பிரதேசத்தின் மகிமைகளையும் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பதனால், கணவன் நடந்து கொள்ளும் முறைகள் பல சந்தர்ப்பங்களில் அவளுக்கு மனக்குறைவை ஏற்படுத்துவதோடு, அவர்களது குடும்ப வாழ்வில் பிரச்சனைகளையும் கொண்டு வருகிறது. பிறந்த வீட்டு நினைவுகளை மட்டுமல்ல பயத்தையும் விட்டுவிட்டு வரும்படி 8ம் வசனத்தில் சாலொமான் கூறுகிறான். இதனால் “சிங்கங்களின் தாபரங்களிலிருந்தும் சிவிங்கிகளின் மலைகளிலிருந்தும் கீழே பார்” என்று சாலொமோன் குறிப்பிட்டுள்ளான். சிங்கமும் சிவிங்கியும் இருக்கும் இடங்கள் பயங்கரமான இடங்களாகும்.

சூலமித்தியைத் தொடந்து புகழும் சாலொமொன் அவளது பார்வை (4:9), அரவணைப்பு (4:10), முத்தம் (4:11) தனக்கு எப்படிப்பட்டதாயிருக்கிறது என்ற கூறுவதோடு, அவள் கற்புள்ளவள் என்பதையும் (4:12), அவள் தனக்கு எந்த அளவு இன்பத்தைத் தருகிறாள் என்பதையும் (4:13-15) குறிப்பிட்டுள்ளான். இவ்வசனங்களில் ‘தோட்டம்’ என்னும் பதம் சூலமித்தியின் சரீரத்திற்கான உருவகமாக உபயோகிக்கப்பட்டுள்ளது. 16ம் வசனம் சூலமித்தியின் கூற்று. 5:1ன் ஆரம்பப் பகுதி சாலொமோனின் கூற்று. ஆனால் இவ்வசனத்தின் இறுதிப்பகுதியில் “சிநேகிதரே புசியுங்கள். பிரியமானவர்களே குடியுங்கள். பூர்த்தியாய் குடியுங்கள்” என்பது தேவனின் கூறாறாகக் கருதப்படுகின்றது. சில ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்புகள் இதை நண்பர்களின் கூற்றாகக் குறிப் பிட்டுள்ள போதிலும், முதலிரவில் சாலோமோனும் சூலமித்தியும் தனித்திருக்கும்

[137] J.S. Deere, *Song of Songs: The Bible Knowledge Commentary Old Testament*, p. 1019.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

போது, நண்பர்கள் அங்கிருப்பதாகக் கூறுவது அர்த்தமற்றது. தேவனே மனுக் குலத்திற்குத் தாம் ஏற்படுத்திக் கொடுத்த தாம்பத்திய வாழ்வை (ஆதி.2:24) அனுபவித்து மகிழும்படி இவ்வசனத்தில் கூறுவதாக வேத ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். பாலியல் பாவமானது என்று வேதப்புரட்டர்களின் (பிசாசின்) போத னைகள் கூறுகையில் (1தீமோ.4:1-3), மனைவியுடன் மகிழ்ந்திருக்கும்படி தேவன் அறிவுறுத்தியுள்ளார் (நீதி.5:18). ஆவிக்குரிய பிரகாரமாக, கிறிஸ்தவன் இயேசு கிறிஸ்துவுடனான அந்நியான்ய உறவில் மகிழ்ந்திருக்க வேண்டும்.

உன்னதப்பாட்டு 5:2-8:4 வரையிலான மூன்றாவது பகுதி, திருமணத்தின் பின்னர் கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான உறவு எவ்வாறு பக்குவமடைகிறது என்பதை அறியத்தருகின்றது. இப்பகுதியில் 5:2லிருந்து 6:13 வரை குடும்பவாழ்வில் பொதுவாக ஏற்படும் ஒரு பிரச்சனையைப் பற்றி சித்தரிக்கப்பட்டுள்ளது.[138] சாலொமோன் தனக்கென கொடுத்த அரன்மனையில் சூலமித்தி இருக்கின்றாள். இரவு சாலொமோன் வருவதற்கு நேரமாகி விட்டமையால், அவன் வரும் வரைக்கும் அவள் காத்திராமல், நித்திரை கொள்ளத் தொடங்கிவிட்டாள். நேரம் கழித்து வந்த சாலொமோன் கதவைத் தட்டிக்கொண்டிருக்கின்றான் (5:2). ஆனால் சூலமித்தியோ படுக்கையிலிருந்து எழும்பிச் சென்று கதவைத் திறக்க மனமற்றவளாக இருந்தாள் (5:3). இரவு நேரத்துப் பனியும், தூறலும் சாலமோனின் தரையை நனைத்திருந்தாலும், சூலமித்திகுத் தன் கணவனின் தலை ஈரமாயிருப்பதைக் குறித்து அக்கறையற்றவளாக, தனது பாதங்கள் தரையில் பட்டு அழுக்காவதைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தாள். கணவனோ அல்லது மனைவியோ இப்படி தங்களது சுகத்தைப் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருப்ப தும், மற்றவரைப் பற்றி அசிரத்தையாய்[139] இருப்பதும் குடும்ப வாழ்வில் பலவிதமான பிரச்சனைகளை ஏற்படுத்துகிறது. சூலமித்தியின் செயற்பாடு, சாலோமோன் அவளை விட்டுத் தனியே செல்வதற்குக் காரணமாயிற்று (5:5-6).[140]

---

[138] உன்னதப்பாட்டு 5:2ல் குறிப்பிடப்பட்டுள்ள இச்சம்பவம் முதலிரவிற்கு அடுத்த நாள் நடைபெற்றதாக நாம் கருதலாகாது. உன்னதப்பாட்டில் சித்தரிக்கப்பட்டுள்ள சம்பவங்கள், சாலொமோனினதும் சூலமித் தியினதும் வாழ்வில் நடந்த சில முக்கிய சம்பவங்களை மட்டுமே கொண்டுள்ளது. எனவே 5:1ற்கும் 5:2ற்கும் இடையில் கனிசமான கால இடைவெளி உள்ளது (S.G.Glickman, *A Song for Lovers*, p. 60).

[139] அன்புக்குரியவர் வெறுப்பதைவிட அசிரத்தையாய் இருப்பதே குடும்பவாழ்வில் அதிக வேதனை தருவது. எதிர்ப்பு தெரிவிக்கும் போது நம்மையும் ஒரு பொருட்டாக எண்ணுபவர், நம்மைப் பற்றி அசிரத்தையாய் இருக்கும் போது நம்மை எவ்விதத்திலும் மதிக்காதவராகவே இருப்பார். உண்மையில் அது அதிக வேதனை தருவது (S.G.Glickman, *A Song for Lovers*, p. 61).

[140] சில வேத ஆராய்ச்சியாளர்கள் உன்னதப்பாட்டு 5:1-7 சூலமித்தியின் கனவுக் காட்சி என்று கருதுகின் றனர் (F.Delitzsch, *Commentary on the Song of Songs and Ecclesiastes*, p. 91; D.F.Kinlaw, *Song of Songs: The Expositor's Bible Commentary Volume 5*, p. 1232; J.S.Deere, *Song of Songs: The Bible Knowledge Commentary Old Testament*, p. 1020). ஆனால் இவ்வசனங்களைக் கனவுக் காட்சியாக விளக்கினால் தொடர்ந்து வரும் பகுதியுடன் தொடர்பற்ற நிலையிலேயே இப்பகுதி காணப்படும். மேலும் "மூலமொழியில் இப்பகுதி கனவுக் காட்சியைக் குறிக்கும் வாத்தைகளில் எழுதப்படவில்லை" (M.H.Pope, *Song os Songs: Anchor Bible Commentary*, pp. 510-511). 5:2ல், "நான் நித்திரை பண்ணினேன், என் இதயமோ விழித்திருந்தது" என்னும் வாக்கியம், இதயம் கனவு கண்டு கொண்டிருந்தது என்னும் அர்த்தத்தில் அல்ல, சிறு சத்தத்திலும் விழித்துக் கொள்ளக்கூடிய நிலையில் இருந்தது என்பதையே சுட்டிக்காட்டுகிறது" (D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, p. 409). ஆனால் இப்பகுதியைக் கனவுக்காட்சியாக விளக்குபவர்கள் இதயம் என்பது இவ்வசனத்தில் மனதையே குறிக்கின்றது என்று கூறுவதன்மூலம், மனம் விழித்திருந்தது என்பது மனம் கனவு கண்டுகொண்டிருந்த தையே அறியத்தருகின்றது என்று விளக்குகின்றனர் (R.Murphy & E.Huwiler, *Proverbs, Ecclesiastes, Song of Songs: New International Biblical Commentary*, p. 277).


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

கதவைத் திறந்த சூலமித்தி, சாலொமோன் சென்றுவிட்டதை அறிந்து அவனைத் தேடி நகரமெங்கும் அலைந்தாள். அப்போது நகரக் காவலாளர்கள் அளைத் தாக்கினார்கள் (உன்.5:7).[141] சாலேமோனைக் காணாது தவித்த சூலமித்தி எருசலேம் நகரப் பெண்களிடம் அவனைப் பற்றி விசாரித்தாள் (உன்.5:8). அவள் சாலோமோனைத் தேடியலைவதை அறிந்த எருசலேம் நகரப் பெண்கள், இப்படி அவனைத்தேடியலைவ தற்கு அவன் எவ்விதத்தில் சிறப்பானவன் என்று கேட்டனர் (உன்.5:9). இதனால் சூலமித்தி தன் கணவன் எப்படிப்பட்டவன் என்பதை 10 முதல் 16 வரையிலான வசனங்களில் குறிப்பிட்டுள்ளாள். சாலெமோனை வர்ணிக்கும் சூலமித்தி, அவன் அறிவுடையவன் (தங்கமயமான தலை உன்.5:11),[142] வாலிபன் (கருமையான தலைமயிர் உன்.5:11), சாந்தமானவன் (புறாக்கண்கள் உன்.5:12),[143] தாடிவைத்தவன் (கன்னத்திலிருக்கும் கந்தவர்க்கப்பாத்தி (உன்.5:13),[144] அவனது உதடுகள் அழகானவை (உன்.5:13),[145] கரங்கள் உறுதிமிக்கவை (உன்.5:14), சரீரமும் திடகாத்திர மானது (உன்.5:14), கால்கள் வலிமை பொருந்தியவை (உன்.5:15), அழகாகப் பேசுபவன் (மதுரமான வாய் உன்.5:16)[146] பூரணமான அழகுள்ளவன் (உன்.5:16) என்று குறிப்பிட்டுள்ளாள்.

சூலமித்தியின் வார்த்தைகளைக் கேட்ட எருசலேம் நகரப் பெண்கள், அவளது கணவன் எங்கே போய்விட்டான் என்று கேட்டனர் (6:1). சாலமொமோன் தன்னைவிட்டுப் போனாலும், அவன் வேறு பெண்களிடம் சென்றிருக்கமாட்டான் என்னும் நம்பிக்கை யில் அவன் தன் தோட்டத்திற்குச் சென்றுள்ளதாக சூலமித்தி கூறுகின்றாள் (6:2).[147] சூலமித்தியின் வார்த்தைகள் குடும்பவாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளையும் பிரிவுக

[141] அவள் நகரத்தில் சென்ற விதம் ஒரு திருடன் சென்றதைப் போலிந்தமையால் நகர காவலாளர்கள் அவளைத் தாக்கியுள்ளனர். அவள் தன் நிலையைப் பற்றி கூறுவதற்கும் முன்பே காவலாளர்கள் அவளைக் குற்றவாளி என்று முடிவுகட்டியிருக்க வேண்டும்.

[142] இவ்வசனத்தில் தங்கம் நிறத்தை அல்ல பெறுமதியைக் குறிக்கின்றது

[143] "பாலில் கழுவப்பட்டவைகளும் நோத்தியாய் பதிக்கப்பட்டவைகளுமாய் இருக்கின்றன" என்பது, கருவிழிகள் இரண்டும் வெண்மையான கண்மணியில் இருக்கின்றன என்பதாகும். வெண்மை வெறித்தன்மை அற்ற நிலையையும் உருவகிக்கின்றது (J.S.Deere, *Song of Songs: The Bible Knowledge Commentary Old Testament*, p. 1021).

[144] ஆக்காலத்தில் தாடிக்கு வாசனைத்திரவியம் போடும் வழக்கமிருந்தது. இதனாலேயே தாடியை கந்த வர்க்கப்ப பாத்தி என்று சூலமித்தி குறிப்பிட்டுள்ளாள்.

[145] இது அவன் தனக்கு கொடுத்த முத்தத்தை நினைத்து அவள் சொன்னது என்று சில வேத ஆராய்ச் சியாளர்கள் கூறுகின்றனர் (G.L.Carr, *The Song of Solomon: Tyndale Old Testament Commentary*, p. 142). ஆனால், தன் கணவனைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக அவனது தோற்றத்தை வர்ணிக்கும் சூலமித்தி, முத்தத்தைப் பற்றி குறிப்பிடுவதாகக் கூறுவது அர்த்தமற்றது.

[146] வாயைப் பற்றிய விவரணம் பேச்சை மட்டுமல்ல முத்தத்தையும் குறிப்பதாக சில வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர் (D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, p. 415). ஆனால், இவ்விடத்திலும், 77ம் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயம், இவ்வசனம் முத்தத்தைக் குறிப்பிடவில்லை என்பதற்கான காரணமாய் உள்ளது.

[147] உன்னதப்பாட்டு 4:12-5:1ல், தோட்டம் என்னும் பதம் சூலமித்தியில் சரீரத்தைக் குறிக்கும் உருவக விவரணமாக உபயோகிக்கப்பட்டிருப்பதனால், இவ்வசனத்திலும் (6:2லும்) இவ்வித அர்த்தத்துடனேயே தோட்டம் என்னும் பதம் உள்ளதாக சில வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர் (G.L.Carr, *The Song of Solomon: Tyndale Old Testament Commentaries*, p. 145). இதனால், சாலொமோன் தன்னுடன் இருப்பதாகவே சூலமித்தி கூறுவதாக அவர்கள் இவ்வசனத்தை விளக்குகின்றனர் (D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, p. 415). சாலொமோனைத் தேடியே சூலமித்தி எருசலேம் நகரில் அலைந்து திரிந்தமையால், அவன் சூலமித்தியுடன் அச்சமயம் இருப்பதாகக் கூறுவது அர்த்தமற்றது. மேலும், உன்னதப்பாட்டு 4:12-5:1ல், சாலொமோன் சூலமித்தியுடன் இருப்பதைப் பற்றி கூறும்போது, அவன் தன் தோட்டத்திற்கு வந்ததாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இங்கு அவன் தோட்டத்திற்குச் சென்றுவிட்டதாகவே சூலமித்தி கூறுகிறாள். எனவே சாலொமோன் தன்னுடன் இருப்பதா கவே சூலமித்தி கூறுகிறாள் என்னும் விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாய் இல்லை.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

ளையும் தீர்ப்பதற்கான சில விடயங்களை அறியத்தருகின்றன. சூலமித்தி ஆரம்பத்தில் அசிரத்தையாய் இருந்தாலும், இத்தகைய மனநிலை நீண்டநேரத்திற்கு இருப்பதற்கு அவள் அனுமதிக்கவில்லை. இதனாலேயே அவள் அவனைத்தேடிச் சென்றாள். குடும்பவாழ்வில் கணவனுக்கும் மனைவிக்கும் ஒருவர்மீது மற்றவருக்கு ஏற்படும் கசப்புகள், கோபங்கள், அக்கறையின்மை என்பன நீண்ட காலத்திற்கு மனதில் நிலைத்திருப்பதற்கு இடமளிக்கக்கூடாது. சூரியன் அஸ்தமிப்பதற்கு முன்னர் எரிச்சல் தணிய வேண்டும் என்பதே தேவ ஆலோசனையாகும். இரண்டாவதாக சூலமித்தி தன் கணவனைப் பற்றி எருசலேம் நகரப் பெண்களிடம் குறைகூறவில்லை. அவனைப் பற்றி மிகவும் உயர்வாகப் புகழ்ந்தாள். கணவனும் மனைவியும் ஒருவரைப் பற்றி ஒருவர் வேறு நபர்களிடம் விமர்சிக்கக்கூடாது. மற்றவர்களிடம் நற்குணங்களைப் பற்றி மட்டுமே கூறவேண்டும். முன்றாவதாக சூலமித்திக்கு சாலெமோனைப் பற்றிய சந்தேகம் இருக்கவில்லை. நகரெங்கும் அனைத் தேடியும் அவனைக் கண்டுபிடிக்காதமையால், அவன் நிச்சயம் தன் தோட்டத்தில் இருப்பான என்ற நம்பிக்கை எவளுக்கு இருந்தது. நான்காவதாக, சாலொமோன் தன்னைவிட்டுச் சென்றபோதிலும், "நான் என் நேசருடையவள் என்நேசர் என்னுடையவர்" (6:3) என்று அவள் கூறக்கூடியவளாய் இருந்தாள். "தங்களுக்கிடையில் சிறு பிரிவு ஏற்பட்டுள்ள போதிலும், எமக்கிடையில் இருக்கும் உறவு முறிவடைந்து போய்விடவிலை. எனவே விவாவரத்து இதற்கான தீர்வு அல்ல என்பதை அவள் அறிந்திருந்தாள்."[148] ஐந்தாவதாக, பிரச்சனை ஏற்பட்டபோது, இருவரும் ஒரேநேரத்தில் உணர்ச்சிவசப்பட்டு செயற்படாமல் ஒருவர் அமைதியாய் இருத்தல் அவசியம். இங்கு சாலோமோன் அமைதியாக இருப்பதை அவன் தன் தோட்டத்தில் செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகள் அறியத்தருகின்றன (6:2). 'மேய்தல்' 'கொய்தல்' என்னும் இரு வேலைகளும் சாலொமோனின் அமைதியையும் பொறுமையையும் சுட்டிக்காட்ட உபயோகிக்கப்பட்டுள்ள உருவகங்களாகும்.

தன்மீது அசிரத்தையாய் இருந்த தன் மனைவியுடன் ஒப்புரவாகிய பின்னர் சாலொமோன் அவளைக் கடிந்து கொள்ளவில்லை. அவளது நடத்தையைக் குற்றப்படுத்தவில்லை. அவள் தன்னுடையவள் என்பதனால், அவளை மன்னித்து, அவளது அசிரத்தையான போக்கை மறந்து அவளைப் புகழுகிறான். தவறுகளை மன்னிப்பதும், அவற்றைப் பற்றி பேசிக்கொண்டிராமல் அவற்றை மறந்துவிடுவதும் குடும்பவாழ்விற்கு இன்றியமையாதது. சூலமித்தியைப் புகழும் சாலொமோனின் வாத்தைகள் (6:4-7), முதலிரவில் அவன் அவளைப் புகழ்ந்த விதமாகவே இருப்பதை நாம் அவதானிக்கலாம்.[149] இது, திருமணத்தின் முதல் நாளில் அவள் தனக்கு எப்படிப்பட்டவளாக இருந்தாளோ அதேவிதமாகவே இப்போதும் அவள் இருக்கின்றாள் என்பதை அவன் அவளுக்கு காண்பிக்கும் வர்னணையாக உள்ளது. இடையில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அவன் அவள் மீது வைத்திருந்த அன்பைக் குறைத்து விடவில்லை. பிரச்சனை

[148] S.C.Glickman, *A Song for Lovers*, p. 70.

[149] 5ம் வசனத்தில் 'அளகபாரம்' என்று மொழிபெயர்க்கப்பட்டிருப்பது கூந்தலாகும். திருவிலிலியத்தில் இப்பதம் உபயோகிக்கபப்ட்டிருக்கையில் புதிய இலகு தமிழ் மொழிபெயர்ப்பு 'தலைமயிர்' என்று இதை குறிப்பிட்டுள்ளது.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

காரணமாக அவன் அவளைப் புறக்கணித்தவிடவில்லை. அவள் எபபொழுதும் அவனது அன்பிற்கு உரியவனாகவே இருந்தாள். குடும்பவாழ்வு சீராக இருப்பதற்கு இத்தகைய மனநிலை தம்பதியருக்கு இருக்க வேண்டியது அவசியம்.

சாலோமோனின் புகழுரையில் நாம் அவதானிக்க வேண்டிய இன்னுமொரு முக்கிய விடயம், முதலிரவு வர்னனைகள் இதில் உள்ள போதிலும், பாலியல் உணர்வகளைத் தூண்டும் உதடுகளையும் மார்பகங்களையும் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. அதே சமயம் அவளது கண்களைத் தன்னைவிட்டு அகற்றும்படி சாலொமோன் சொன்னதும் நாம் கருத்திற்கொள்ளப்படவேண்டிய விடயமாகும். சாலோமோனின் வாத்தைகளிலி ருந்து நாம் அறிந்து கொள்ளும் விடயம், அவன் அவளை நேசிப்பது வெறும் பாலியல் காரணங்களுக்காக மட்டும் இல்ல என்பதாகும். பாலியலுக்காக இரவில் அவளிடம் வந்தவன், அவளது அசிரத்தையினால் திரும்பிச் சென்றான். அவன் இதை மனதிற் கொண்டவனாக அவளை வெறுக்காமல், தான் அவளிடம் வருவது பாலியலுக் காக மட்டும் அல்ல என்பதை உறுதிப்படுத்துகிறான்.[150] குடும்பவாழ்வில் பாலியலுக்காக மட்டுமே கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் நேசிப்பவர்களாக இருந்தால் அவர்களது வாழ்வு இனிமையற்றதாகவே இருக்கும்.

சாலொமோனின் வாத்தைகளில் முதலிரவு வர்னணையில் உள்ள சில விடயங்கள் விடப்பட்டுள்ள போதிலும், சில புதிய விடயங்கள் சோக்கப்பட்டுள்ளதையும நாம் அவதானிக்கலாம் (6:8-10). அரண்மனையில் அநேகம் பெண்கள் இருக்கையில் சூலமித்தியை மணமுடித்ததைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. அவள் மற்ற அனைவரையும்விட சிறப்பானவளாக இருந்தாள். அவள் அனைவராலும் புகழப்படும் விதத்தில் இருந்தாள் (உன்.6:9). பலர் இருந்தாலும் அவள் மட்டுமே அவனது மனதைக் கவர்ந்து கொண்டாள். ஒவ்வொரு கணவனுக்கும் மனையும், மனைவிக்கு கணவனும் இப்படிப்பட்ட நிலையில் இருக்க வேண்டும். சூலமித்தி அசிரத்தையாய் இருந்தாள் என்பதற்காக அவன் அவளைவிடடு வேறு பெண்களிடம் செல்வதற்கு வாய்ப்பிருந்தும் அவர்களிடம் செல்லவில்லை. அவன் அந்தப்புரத்திழற்கு அல்ல தோட்டத்திற்கே சென்றிருந்தான் (உன்.6:2). அவன் அவளைப் பற்றிய நினைவுடன் அவளுக்காகக் காத்திருந்தான். கணவன் தன் பெருமைகளைவிட்டுவிட்டு, தாழ்மையுடன் தன் மனைவியின் பிழைகளை மன்னித்து அவளை ஏற்றுக் கொண்டு, அவளை உண்மையாக நேசிப்பானாயின், குடும்பவாழ்வின் பிரச்சனைகளுக்கு இதுவே தீர்வின் வழியாக அமையும்.

உன்னதப்பாட்டு 6:11-12ல் கணவனோடு ஒப்புரவாகியதைப் பற்றி சூலமித்தி கூறும் விடயமாய் உள்ளது.[151] சாலொமோன் தன் தோட்டத்திற்குச் சென்றிருக்க வெண்டும் என்பதை அறிந்து கொண்ட சூலமித்தி (6:2), சாலொமோன் தம் மீது வைத்திருக்கும் காதல் இன்னும் மலர்ந்திருக்கிறதா என்பதை அறிந்து கொள்வதற்காக அங்கு

[150] S.C.Glickman, *A Song for Lovers*, p. 72.
[151] J.S.Deere, *Song of Songs: The Bible Knowledge Commentary Old Testament*, p. 1022.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London

செல்கின்றாள் (6:11). அங்கு சென்றவுடன் அவள் கேட்ட வார்த்தைகள் சாலொமோனின் புகழ் மொழிகளே. இதனால் அவன் இன்னும் தன்னை நேசிக்கின்றான் என்பதை அவள் அறிந்து கொண்டாள். எனினும் இமைப்பொழுதில் அவன் அவளைத் தன் இரதத்தில் ஏற்றிக்கொண்டு அவளோடு செல்கின்றான். (6:12).[152] எருசலேம் நகரப் பெண்களோ அவள் வர்ணித்த சாலொமோனைப் பார்க்க ஆசைப்பட்டு அவளைத் திரும்பி வரும்படி அழைத்தனர் (6:13).


Bloch, Ariel. & Bloch, Chana. *The Song of Songs: A New Translation with an Introduction and Commentarty*. New York: Random House, 1995.

Bullock, C.H. *An Introduction to the Old Testament Poetic Books*. Chicago: Moody Press, 1979.

Carr, G.Lloyd. *The Song of Solomon: Tyndale Old Testament Commentaries*. Leicester Downers Grove: Inter Varsity Press, 1984.

Childs, B.S. *An Introduction to the Old Testament as Scripture*, Philadelphia: Fortress Press, 1979.

Dockery, D.S. *Biblical Interpretation: Then and Now*, Grand Rapids: Baker Book House, 1992.

Falk, Marcia. *The Song of Songs: A New Translation and Commentary*. San Francisco: Harper & Row, 1990.

Garrett, Duane A. *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*. Nashville: Broadman Press, 1993.

Glickman, S.Craig. *A Song for Lovers*. Downers Grove: Inter Varsity Press, p. 1976.

Morgan, Campbell G. *The Analysed Bible*, Westwood: Revell Publishers, 1964.

Olyott, Stuart. *A Life Worth Living and A Lord Worth Loving*. Welwyn: Evangelical Press, 1983.


[152] 12ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இரதத்தை சில வேத ஆராய்ச்சியாளர்கள் திருமண வைபவத் தோடு சம்பந்தப்பட்டதாக விளக்குகின்றனர். இதன்படி இவ்வசனம், சாலொமோன் திருமணமுடித்து சூலமித்தியைத் தன்னோடு இரதத்தில் அழைத்துச் செல்வதைப் பற்றிய விவரணமாய் உள்ளது. (D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, p. 419). ஆனால், அவ்விளக்கம் உன்னதப்பாட்டின் தொடச்சி


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London